# அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் கல்டிமுல்லவிலுள்ள தளபாடம் உற்பத்திசெய்யும் பொறியின் செயலாற்றல் கணக்காய்வு - 2010




## 2010 ஒக்தோபர்

## கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம், இலங்கை

## 01. நிறைவேற்றுப் பொழிப்பு

அரசாங்க மரக் கூட்டுத்தாபனமானது 1957 இன் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் கீழ் 1968 ஏப்ரல் மாதத்தில் தாபிக்கப்பட்டிருந்தது. மிகவும் நம்பகரமான மற்றும் சிறந்த தரமுள்ள மரங்களையும் மரத்தினை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திப் பொருட்களையும் வழங்குவதில் நாட்டின் முதன்மையாளராக விளங்குவதே அதன் நோக்கங்களாக உள்ளது. கூட்டிணைந்த இலக்குகளையும் குறிக்கோள்களையும் அடைந்துகொள்ளும் வகையில் அரசாங்க மரக் கூட்டுத்தாபனமானது 13 மரம் அரியும் ஆலைகள், 4 மரம் செயன்முறைப் பொறி, 3 தளபாடம் உற்பத்திசெய்யும் தொழிற்சாலைகள் மற்றும் 32 விற்பனை நிலையங்கள் என்பவற்றினை உள்ளடக்கிய நாடளாவிய செயற்பாட்டு வலையமைப்புடன் சிறப்பாக அமையப்பெற்றது.

அரச மரக் கூட்டுத்தாபனமானது கல்டிமுல்ல, அம்பாறை மற்றும் புஸ்சா ஆகிய மூன்று தளபாடம் உற்பத்தி செய்கின்ற பொறிகளைக் கொண்டுள்ளது, கல்டிமுல்லவிலுள்ள தளபாடம் உற்பத்திசெய்கின்ற பொறியானது 1981 ஆம் ஆண்டில் அதன் உற்பத்திச் செயன்முறையினை தொடங்கப்பட்டிருந்ததுடன் 2000 ஆம் ஆண்டிலிருந்து வீட்டுத் தளபாடங்களை உற்பத்தி செய்வதனை தொடங்கியிருந்தது. எவ்வாறாயினும் கல்டிமுல்லவிலுள்ள தளபாடம் உற்பத்திசெய்கின்ற பொறியானது நட்டமடையும் பிரிவாக செயற்பட்டிருந்தது. ஆகவே, கல்டிமுல்லவிலுள்ள தளபாடம் உற்பத்திசெய்கின்ற பொறியானது செயலாற்றல் கணக்காய்வின் முன்னோடிச் செயற்திட்டமாக தெரிவு செய்யப்பட்டிருந்தது.

கல்டிமுல்லவிலுள்ள தளபாடம் உற்பத்திசெய்கின்ற பொறியின் செயற்பாடுகள் எதிர்காலத்தில் வர்த்தக மற்றும் நிதிசார் சிறப்பான நிலைமை பேணும் வகையில் பனனுறுதியான, ஆக்கபூர்வமான மற்றும் சிக்கனமாக மேற்கொள்ளப்படுகின்றதா என்பதனை மதிப்பீடு செய்வதே கணக்காய்வின் பிரதான குறிக்கோளாகும். கல்டிமுல்லவிலுள்ள தளபாடம் உற்பத்திசெய்கின்ற பொறியின் செயற்பாடுகளால் சுற்றாடலிற்கு பாதகமான விளைவுகள் உள்ளதாவென உறுதிப்படுத்துவதற்கு நடாத்தப்படுகின்றது.

கணக்காய்வானது 2010 யூலை முதல் 2010 ஒக்தோபர் வரையான காலத்தின் போது திட்டமிடப்பட்டு நடாத்தப்பட்டது. ஆவணச்சான்றுகள் சேகரித்தல், கள வேலைகள், பௌதீக மெய்மையாய்வு மற்றும் அவதானிப்புகள் என்பவற்றினை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

முக்கியமான கணக்காய்வு காண்புகளின் பொழிப்பானது பிரதான தளபாட விடயங்களின் விற்பனை விலை நடைமுறை சந்தைவிலைகளிற்கு குறைவாக இருத்தல், தளபாட விடயங்களின் நியமக் கிரயம் சரியானதாக இல்லாதிருத்தலும், நீண்டகாலமாக திருத்தம் செய்யாதிருத்தலும், உச்ச

அளவு விற்பனைகளைத் திட்டங்களும் கலவையில் இல்லாமை பொறிகள் செயற்படாதிருத்தல், சந்தைப்படுத்தல் தந்திரோபாயங்களும் இல்லாமை, வாடிக்கையாளர்களிற்கு கவர்ச்சியல்லாத காட்சியறைகள், கல்டிமுல்ல தளபாடம் உற்பத்திசெய்கின்ற பொறிக்காக முறையான ஆட்சேர்ப்புத் திட்டம் இன்மை, உத்தியோகத்தர்களிற்கு போதிய பயிற்சியின்மை, செயற்பாடுகள் மீது ஒருங்கிணைப்பு மற்றும் மேற்பார்வை இன்மை, பொருட்கள் சேதமடைதல், ஊழியர்கள் மற்றும் இயந்திர மணித்தியாலங்கள் பயன்படுத்தப்படாமை, விநியோகப் பட்டியல் தயாரிக்கும் போது தொழிற்சாலை பருவகாலப் பொறிகள் மரம் அரியும் ஆலை என்பவற்றிற்கு இடையிலான ஒருங்கிணைப்பு இன்மை, அரிந்த மரங்களின் பெறுமதியுடைய மற்றும் பயன்படுத்தக்கூடிய துண்டுகளை விறகாக பயன்படுத்தல், மூலப் பொருட்களின் சிக்கனமற்ற கொள்வனவு, முறையான தரப் பரிசோதனை மற்றும் காப்பீடு இன்மை, தேவையில்லாமல் தொழிற்சாலைகளிலிருந்து தளபாடங்கள் உற்பத்தி செய்தல், முறையான இருப்புப் பதிவேடுகள் பேணாமை, காணி மற்றும் கட்டிடங்களின் செயற்றிறனற்ற பயன்பாடு, சுற்றாடல் ரீதியாக தீமையான உற்பத்திச் செயன்முறை, உரிய வேளையில் முகாமைத்துவ தகவல் இல்லாமை அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தால் ஒன்றிணைந்த ஆளுகை வழிகாட்டல்களுடனான இணக்கம் இன்மை என்பவற்றினை உள்ளடக்குகின்றது.

கணக்காய்வு சிபார்சுகளானது ஏனையவற்றிற்கு மத்தியில் போட்டியான சந்தை விலைகள் மற்றும் நியமக் கிரய கட்டமைப்பினை கருத்தில் கொள்வதற்காக சரியான விலையிடல் முறைமையினை அறிமுகப்படுத்தல், மற்றும் கைநூல் நடைமுறைகளை நீக்குவதற்காக விற்பனை முறைமை மற்றும் தன்னியக்க விலையிடல் மற்றும் பட்டியலிடல் நடைமுறைகளை அறிமுக்கடுத்தல், கிடைக்கக் கூடிய மூலவளங்களிற்குள் அதிக இலாபத்தன்மையுடைய உற்பத்திக் கலவையை இனங்காணல், வாடிக்கையாளர்களிற்கு அதிகளவு தெரிகின்ற அமைவிடங்களை அமைப்பதற்கு காட்சியறைக்குள் முறையான சந்தைப்படுத்தல் பொறிமுறை மற்றும் அவசியமான உட்கட்டமைப்பு வசதிகள், காட்சியறை உத்தியோகத்தர்கள் மற்றும் தொழிற்சாலை தொழிலாளர்களிற்கான முறைசார் பயிற்சி வழங்கல், மேற்பார்வை மற்றும் தந்திரோபாய தீர்மானம் எடுத்தல் என்பதற்காக முகாமைத்துவ தகவல் முறைமையை (எம்ஐஎஸ்) அறிமுகப்படுத்தல்,மேற்கொள்ளக் கூடிய மூலவளங்களை முறையாகப் பயன்படுத்துவதற்காக முறையான உற்பத்தித் திட்டத்தினை கருத்தில் கொள்ளவேண்டிய காரணி நடவடிக்கைகளின் திட்டமிடல் மற்றும் மேற்பார்வைகளில் பிரதான முகாமையார்கள் ஈடுபட வேண்டும், உட்கட்டமைப்பு முன்னேற்றுதல் மற்றும் சேதத்தினைக் குறைத்தல் என்பதற்காக 5 எஸ் முறைமையை அறிமுகப்படுத்தல், மிகையூதிய திட்டத்தை அறிமுகப்படுத்தல், கொள்வனவு வழிகாட்டல்களுடன் இணங்குதல், தொழில் திறன் மற்றும் அனுபவமுள்ள தொழிலாளர்களை சேர்ப்பதற்கு தற்போதுள்ள ஆட்சேர்ப்பு நடைமுறையை கண்டிப்பாக பிரயோகித்தல், தரக்கட்டுப்பாட்டு செயற்பாடுகளை அறிமுகப்படுத்தல், ஒன்றிணைந்த ஆளுகை வழிகாட்டலுடன் இணங்குவதற்கு பணிப்பாளர் சபை படிமுறைகளை எடுக்கவேண்டும், நில நீர் மாசடைவதைக் குறைப்பதற்காக மரப்பதப்படுத்தல் பகுதி, அறுத்த மரத்தினை களஞ்சியப்படுத்தும் பகுதி மற்றும் வெட்டிய மரங்களை களஞ்சியப்படுத்தும் பகுதி என்பவற்றின் தரைக்கு நன்றாக சீமெந்திடப்பட வேண்டும், பிரமாணங்களின்படி கழிவுப்பொருட்கள் (மரத்தூள்) அகற்றப்பட வேண்டும், தொழிற்சாலைக்குள் போதிய காற்றோட்ட மற்றும் வெளிச்ச வசதியும்

தொழிலாளருக்கு பாதுகாப்பும், தொழிற்சாலைகளின் மரத்தேவைகள் முறையாக திட்டமிடப்பட வேண்டும், உற்பத்தி செயன் முறையில் முறையில் திட்டத்தின்படி மரத்தினை அரிதல், பதப்படுத்தல் மற்றும் வெட்டுதல் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் இருக்கவேண்டும், மரம்வெட்டும் பொறித் தொகுதியில் இருப்புப் பேரேட்டினைப் பேணுவதற்கு உரிய முறைமையை அறிமுகப்படுத்தும் தேவைப்பாடு, நீராவிக்கு அவற்றினை விறகாக பயன்படுத்த முன்னர் மரத்தினைத் தெரிவு செய்வதற்கு உரிய செயன்முறையை அறிமுகப்படுத்தல் என்பவற்றினை உள்ளடக்குகின்றது.

## 2. அறிமுகம்

### 2.1 பின்னணி

அரச மரக் கூட்டுத்தாபனமானது 1957 இன் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் கீழ் 1968 ஏப்ரல் மாதத்தில் தாபிக்கப்பட்டிருந்தது. வனமூல வளங்களின் அறுவடைக்கும் மரம் மற்றும் தளபாட கைத்தொழில் மற்றும் இலங்கை மக்களால் வேண்டப்படுகின்ற பொருள்வடிவில் அவற்றினை மாற்றுவதற்கும் பொறுப்புடைய அரச நிறுவனமாக பாராளுமன்ற அதிகாரச் சட்டம் மூலம் இது சட்டமாக்கப்படுகின்றது. இது சுற்றாடல் அமைச்சின் கீழ் செயற்படுகின்றது.

அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் வேகமாக அருகிவரும் மரவளங்களை உச்ச அளவில் பயன்படுத்துவதற்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள மற்றும் கைத்தொழிலில் ஈடுபடுத்தப்பட்ட ஏனையவைகளில் ஆக்கத்திறனை அதிகரிப்பதற்குமான நவீன கைத்தொழில் போக்கினைக் கவனத்தில் கொண்டு மரக் கைத்தொழிலின் செயற்பாடுகளின் அபிவிருத்திக்காக பொறுப்பாகவுள்ளது.

மிகவும் நம்பகரமான மற்றும் அதிகதரமுள்ள மரம் மற்றும் மரத்தினை அடிப்டையாகக் கொண்ட உற்பத்திப் பொருட்களை வழங்குவதில் தேசத்தில் முதன்மையானதாக இருத்தலே அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் தூர நோக்காக உள்ள அதேநேரம் மரம் தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட அறிவு மற்றும் நுட்பங்களின் ஊடாக வாடிக்கையாளர்களிற்கு மரம் மற்றும் மரத்தினை அடிப்படையாகக்கொண்ட உற்பத்திப் பொருட்களை வழங்குவதும் இலங்கையின் தேச மற்றும் சுற்றாடல் தேவைகளிற்கு பங்களிப்பு செய்வதுமே ‘‘பணிகளாக’’ உள்ளது.

கூட்டிணைந்த இலக்குகளையும் குறிக்கோள்களையும் அடைந்துகொள்ளும் வகையில் அரசாங்க மரக் கூட்டுத்தாபனமானது 13 மரம் அரியும் ஆலைகள், 4 மரம் செயன்முறைப் பொறி, 3 தளபாடம் உற்பத்திசெய்யும் தொழிற்சாலைகள் மற்றும் 32 விற்பனை நிலையங்கள் என்பவற்றினை உள்ளடக்கிய நாடளாவிய செயற்பாட்டு வலையமைப்புடன் சிறப்பாக அமையப்பெற்றது.

**கல்டிமுல்லவிலுள்ள கட்டிடத்தொகுதியின் கட்டமைப்பு**

மரக் குற்றிகளின் விற்பனை, மரங்களாக மாற்றுதல், உற்பத்தியும் பூர்த்தியடைந்த உற்பத்திப் பொருட்களின் விற்பனை, மரங்களை வளப்படுத்தல் பாதுகாப்பு மற்றும் பதப்படுத்தல் என்பவற்றினை கல்டிமுல்லவிலுள்ள கட்டிடத்தொகுதியின் பிரதான செயற்பாடுகள் உள்ளடக்கும்.

கல்டிமுல்லவிலுள்ள தளபாடம் உற்பத்திசெய்யும் பொறியின் வரலாற்று மற்றும் நடைமுறைச் சூழ்நிலை தொடர்பான மதிப்பாய்வு.

கேளவ்எம்பி ஆனது 1981 ஆம் ஆண்டில் 04 இயந்திரங்களுடன் அதன் உற்பத்திச் செயற்பாடுகளை தொடங்கியது. பின்னர் 1986 இல் வனவள திணைக்களத்திடமிருந்து மாற்றப்பட்ட 30 இயந்திரங்களை பயன்படுத்தி அலுவலக தளபாடங்களை உற்பத்தி செய்வதற்க பொறி மேலும் விரிவாக்கப்பட்டது. 2000 இற்கு முன்னர் அரச மரக் கூட்டுத்தாபனம் வெளி ஒப்பந்தகாரர்களிடமிருந்து வீட்டுத் தளபாடங்களை கொள்வனவு செய்து விற்பனை செய்து வந்தது. அரசாங்க மரக் கூட்டுத்தாபனமானது 2000 ஆம் ஆண்டிலிருந்து வீட்டுத் தளபாடங்களை உற்பத்தி செய்வதனைத் தொடங்கியிருந்தது.

தற்போது, 60 ஊழியர்கள் தளபாடத் தொழிற்சாலையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் 05 ஊழியர்கள் இரத்மலானை காட்சியறையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மேலும், தச்சுத்தொழிலாளர், வெள்ளையடிப்போர் மற்றும் பிரம்புத் தொழிலாளிகள் தேவைப்படும்போது ஒப்பந்த அடிப்படையில் வாடகைக்கமர்த்தப்பட்டனர்.

## 2.2 கணக்காய்விற்கான அதிகாரம்

அரசியலமைப்பிலுள்ள ஏற்பாடுகள் பொதுத் துறை நிறுவனங்களின் கொடுக்கல் வாங்கல்கள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் நடவடிக்கைகளின் சிக்கனம், வினைத்திறன், ஆக்கபூர்வம் மற்றும் சுற்றாடல் அம்சங்களை மதிப்பிடும் நோக்கில் நிதி கணக்காய்விற்கு மேலதிகமாக செயலாற்றல் கணக்காய்வுகளையும் மேற்கொள்வதற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றது. பொதுத்துறை நிர்வாகம் மற்றும் கணக்களிப்பு என்பவற்றினை முன்னேற்றுவதே இலக்காகும்.

இதன்படி, கல்டிமுல்லவிலுள்ள தளபாடம் உற்பத்திசெய்கின்ற பொயறியின் செயலாற்றல் கணக்காய்வு கணக்காய்வாளர் தலைமை அதிபதியினுடைய அரசியலமைப்பு கடமைகளின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 2.3 தெரிவுசெய்வதற்கான நோக்கங்கள் மற்றும் காரணங்கள்

கேஎவ்எம்பி ஆனது அரச மரக் கூட்டுத்தாபனத்தின் புறம்பான ஒரு பிரிவாக அரசதுறை நிறுவனங்கள் மற்றும் பொது மக்களிற்குத் தேவையான தளபாட தேவைகளை நிறைவேற்றுவதற்காக தாபிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கேஎவ்எம்பி தொடங்கியதிலிருந்து வர்த்தக மற்றும் நிதிரீதியாக சிறப்பாகச் செயற்பட்டிருக்கவில்லை. 2007 ஆம் ஆண்டிலிருந்து ஏற்பட்ட நட்டங்கள் முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது குறிப்பிடத்தக்களவு உயர்வாக இருந்தது.
2007, 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளிற்கான நிதிக் கூற்றுக்களின் பொழிப்பு கீழே தரப்படுகின்றன.

| | 2009 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டு | 2008 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டு | 2007 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டு |
|---|---|---|---|
| | இல.ரூபா. மில் | இல.ரூபா. மில் | இல.ரூபா. மில் |
| விற்பனைகள் | 21.7 | 22.9 | 22.8 |
| கழி: விற்பனைக் கிரயம் | (25.3) | (8.6) | (23.8) |
| மொத்த இலாபம்/ (நட்டம்) | (3.6) | 14.3 | (1.0) |
| நிர்வாக கிரயங்கள் | (25.4) | (25.3) | (20.0) |
| ஏனைய கிரயங்கள் | - | - | - |
| தேறிய நட்டம் | (29.0) | (11.0) | (21.0) |

## 2.4 கணக்காய்வின் நோக்கெல்லை

இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய செயலாற்றல் கணக்காய்வு என்னுடைய நெறிப்படுத்தலின் கீழ் மேற்கொள்ளப்பட்டதுடன், நாங்கள் அவசியமெனக் கருதிய அத்தகை பரிசோதனைகளும் உள்ளடப்பட்டுள்ளன. கேஎவ்எம்பி இனுடைய செயற்பாடுகள் மற்றும் உள்ளகக் கட்டுப்பட்'டு முறைமைகள் (கூறப்பட்ட குறிக்கோள்களை அடைந்து கொள்ளுதல் மீது அவற்றின் தாக்கத்தினை நிர்ணயிப்பதற்காக ஒரு அடிப்படையாக தேவையான அளவு) இனங்காணப்பட்ட குறிக்கோள்களை எய்துவதுடன் தொடர்புபட்ட ஆபத்துக்கள் மற்றும் எங்கள் செயலாற்றல் கணக்காய்வின் கண்டுபிப்புகள் மற்றும் சிபார்சுகளின் முடிவுகள் என்பவற்றின் விளக்கத்தினை நாங்கள் பெற்றுள்ளோம்.

1. அவற்றிலிருந்து நாங்கள் நியாயமான முடிவினை எடுப்பதற்குப் போதியவை என நாங்கள் கருதிய அத்தகைய பொருத்தமான கணக்காய்வுச் சான்றினை பெறவதற்கு

நாங்கள் எதிர்பார்த்தோம். கேஎவ்எம்பி குறிக்கோள்களை அடைந்துகொள்வதனைத் தடுத்த ஆபத்து மற்றும் தொடர்புபட்ட நடவடிக்கைகளின் எங்களுடைய மதிப்பீட்டின்படி எங்களுடைய நடைமுறைகளின் தன்மை மற்றும் அளவு வேறுபடலாம் எங்களுடைய நடைமுறைகளும் கண்டுபிடிப்புகள் மற்றும் சிபார்சுகளை ஆதாரப்படுத்துகின்ற சான்றுகளின் (நிதிக் கணக்காய்வு/ புலனாய்வுக் கணக்காய்வுடன் தொடர்புபடலாம்) பரீட்சிப்புகளையும் உள்ளடக்கியுள்ளது.

2. எங்களுடைய வேலையானது முன்னரே திட்டமிடப்பட்டதுடன் கணக்காய்வு திட்டத்திலும் சேர்த்துக்கொள்ளப்பட்டது. இது செயலாற்றல் கணக்காய்வு காலத்தின் போதான எங்கள் காண்புகளின் அடிப்படையில் வேறுபாட்டிருந்தது. இதன்படி, நாங்கள் சொல்லப்பட்ட சூழ்நிலைகளின்படி எங்களுடைய கணக்காய்வின் நோக்கெல்லையை மாற்றியமைக்கவும் விசேட முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களை முன்வைக்கவும் வேண்டியிருந்தது.

3. எங்களுடைய செயலாற்றல் கணக்காய்வு கேஎவ்எம்பி தொடர்பான இனங்காணப்பட்ட குறிக்கோள்களை மாத்திரம் உள்ளடக்கியிருந்ததுடன் தளபாடங்கள் உற்பத்திசெய்கின்ற பொறிகளின் அல்லது அரசாங்க மரக் கூட்டுத்தானத்தின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வில் ஈடுபட்டிருந்தது.

## 2.5 கணக்காய்வு அணுகுமுறை, குறிக்கோள்கள் மற்றும் பருமனளவு

கணக்காய்விற்கான அணுகுமுறைகள் பின்வருமாறுள்ளன.

- மரம் அரியும் ஆலை, பதப்படுத்தல் பொறி, தொழிற்சாலை மற்றும் காட்சியறைகளின் செயற்பாடுகளை அவதானித்தல்.
- பல சுதந்திரமான மூலங்களிலிருந்து தரவுகளை பெறுதலும் பகுப்பாய்வு செய்தலும். மற்றும், அவற்றினை கேஎவ்எம்பி யுடன் ஒப்பீடு செய்தலும்
- ஏனைய தொடர்புடைய ஆவணங்களை மீளாய்வு செய்தலும் தொடர்புடைய பதவியணியினரை நேர்காணலும்.

- கேஎவ்எம்பி இன் செயற்பாடுகள் எதிர்காலத்தில் வர்த்தக மற்றும் நிதி ரீதியாக சிறப்பான நிலைமையை பேணுவதற்கு வினைத்திறனான, ஆக்கபூர்வமான மற்றும் சிக்கனமான வழிகளில் நடாத்தப்பட்டனவா.
- கேஎவ்எம்பி இன் செயற்பாடுகள் சூழலுக்கு ஏதேனும் பாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தவில்லை என்பதனை உறுதிப்படுத்துவதற்கு நடாத்தப்படுகினறதா என்பதனை மதிப்பிடுவதே

  கணக்காய்வின் பிரதான குறிக்கோள்களாகக் காணப்பட்டன.

**கணக்காய்வு பருமனளவு**

பின்வருவன பருமனளவுகளாகும். அவற்றினை அடிப்படையாகக்கொண்டே கணக்காய்வு காண்புகள் மற்றும் சிபார்சுகள் காணப்படும்.

1. இலாபத்திற்கு அதிகூடிய பங்களிப்புச் செய்யும் தெரிவுசெய்யப்பட்ட தளபாடங்கள் தொடர்பாக விற்பனை விலையில் கேஎவ்எம்பி இலாபத்தை உழைக்கலாம்.

2. இலாபத்திற்கு அதிகூடிய பங்களிப்புச் செய்யும் தெரிவுசெய்யப்பட்ட தளபாடங்கள் தொடர்பாக அளவுகளில் தொழிற்சாலை இலாபம் உழைக்கின்றது.

3. கேஎவ்எம்பி இன் ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட நியமங்கள் மற்றும் சுதந்திரமாகப்பெற்ற நியமங்கள் என்பவற்றிற்கு இணைவாக தெரிவுசெய்யப்பட்ட தளபாடங்களிற்கு வழங்கக் கூடிய பிரதான வளங்களின் பயன்பாடு.

4. எதிர்பார்க்கப்பட்ட பாவனை காலத்திற்கு எதிராக தெரிவுசெய்யப்பட்ட தளபாடங்களின் இருப்பு பாவனைக் காலம்.

5. பொதுமுயற்சிகள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட நல்ல ஆளுகைக்கான நடைமுறைகளின் வழிகாட்டல்களும் தொழிற்சாலை முகாமைத்துவம் மூலம் அமுலாக்களும்.

6. மரத்தூள் கழிவுகள் என்பவற்றின் அகற்றலிற்காக மத்திய சுற்றாடல் அதிகாரசபையால் நிர்ணயிக்கப்பட்ட வழிகாட்டல்கள்/ நியதிகள் மற்றும் கழிவகற்றலிற்கான கேஎவ்எம்பி இன் நடைமுறைகள்.

## 2.6 வரையறைகள், அரிதான வெளியேறுகைகள் மற்றும் தீர்க்கக்கூடியவைகள்

இக்கணக்காய்வினை திட்டமிடலில் முறையில், வரையறைகளை குறைப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டது. எவ்வாறாயினும், சில வரையறைகள் இக் கணக்காய்வின் நோக்கெல்லைக்கு அப்பட்டவையாகும். இக்கணக்காய்வானது நான்கு மாதகாலத்திற்காக மாத்திரம் வரையறுக்கப்பட்டிருந்ததுடன் உத்தியோகத்தர்கள் இக்காலத்தின் போது அவர்களுடைய சாதாரண கடமைகளிலும் ஈடுபடுத்தவேண்டியிருந்தது. கணக்காய்வுக் குழுவால் வேண்டப்பட்ட குறித்த சில தகவல்கள் கேஎவ்எம்பி உத்தியோகத்தர்களால் உடனடியாக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. சிலசமயம், அவர்களுடைய வேலைச் சுமையின் காரணமாக பல நாட்கள் காத்திருக்க வேண்டியிருந்தது. ஆகவே, கணக்காய்வுக் குழு இதுவரை அத்தகைய தகவல்கள் கிடைக்கும் வரை மற்றுமொரு வேலையை

தொடங்க வேண்டியிருந்தது. முகாமைத்துவ தகவல் முறைமை இன்மையால் உற்பத்தி நடைமுறையில் பயன்படுத்திய உண்மையான வளங்களை நேரடியாக இனங்காண முடியாதிருந்த போதிலும் உற்பத்தி நடைமுறையில் பயன்படுத்திய உண்மையான மரங்கள் மற்றும் தொழிலாளர் மற்றும் இயந்திர மணித்தியாலங்களை கணக்காய்வுக்குழு கணிப்பிட வேண்டியிருந்தது. மற்றுமொரு பிரதான வரையறையாகும். கணக்காய்வுக் குழுவானது மர இருப்புப் பதிவேடுகள் கிடைக்காமை காரணமாக இருப்பு மெய்மையாய்வினை மேற்கொள்வதற்கு பட்டியலிடப்பட்ட காலத்தை மிகைத்த காலத்தினை கழிக்க வேண்டியிருந்தது.

செயலாற்றலினை அளவீடு செய்வதற்கான அடிப்படையாகப் பயன்படுத்திய நோக்கெல்லை, குறிக்கோள்கள் மற்றும் கணக்காய்வு பருமனளவு என்பவற்றை உள்ளடக்கும் வேலையின் விரிவான நோக்கெல்லை இந்த அறிக்கையின் பின்இணைப்பு அ இல் தரப்பட்டுள்ளது.

## பகுதி - I

## 3. கணக்காய்வு அவதானிப்புகள் மற்றும் சிபார்சுகள்

### 3.1 நிதிசார் சிறப்புத் தன்மையினைப் பேணுவதற்கு விலை நிர்ணயக்கொள்கை போதியனவாக இல்லை.

**அவதானிப்பு**


இரண்டு அரசாங்க நிறுவனங்கள் மற்றும் ஒரு தனியார் நிறுவனம் என்பவற்றிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பொருட்களிற்காக விற்பனை விலையினை நாங்கள் பெற்றிருந்ததுடன் போட்டியாளர் விற்பனை விலைக்கும் கல்டிமுல்லவிலுள்ள தளபாடம் உற்பத்தி செய்கின்ற பொறியின் விற்பனை விலைக்கும் இடையில் வித்தியாசம் உள்ளதென குறிப்பிடப்பிட்டிருந்தது.

1. அரசாங்க நிறுவனம் 1 (ஜீஜ - 1)
2. அரசாங்க நிறுவனம் 2 (ஜீஜ - 2)
3. தனியார் நிறுவனம் (பிஜ)

தெரிவு செய்யப்பட்ட பொருட்களின் விற்பனை விலைகளிற்காக பின்வரும் அட்டவணை மற்றும் வரைபடத்தினை தயவு செய்து கவனிக்கவும்.

| | தளபாட விடயம் | கேஎவ்எம்பி (இல.ரூபா) | ஜீஜ- 1 (இல.ரூபா) | ஜீஜ- 2 (இல.ரூபா) | பிஜ- 1 (இல.ரூபா) |
|---|---|---|---|---|---|
| 1 | விரிவுரை மண்டப கதிரை- முதிரை | 2,653 | 5,222 | 3,550 | 4,000 |
| 2 | கைப்பிடிக் கதிரை - முதிரை | 2,228 | 9,000 | 3,100 | 3,600 |
| 3 | ஏழுதுனர் கதிரை - முதிரை | 10,591 | 14,000 | 12,100 | 12,600 |
| 4 | கனிஷ்ட நிறைவேற்றுனர் மேசை – முதிரை | 14,479 | 20,000 | 16,400 | 19,000 |
| 5 | ஒற்றைபடுக்கைக் கட்டில்-தேக்கு | 18,525 | 18,000 | 17,000 | 20,500 |
| 6 | சாதாரண கதிரை - முதிரை | 1,944 | 8,300 | 2,800 | 3,300 |
| 7 | இரட்டை படுக்கை கட்டில் - தேக்கு | 22,700 | 22,000 | 22,100 | 27,500 |
| 8 | சாதாரண மேசை - முதிரை | 7,527 | 14,000 | 7,250 | 11,000 |
| 9 | சொகுசுபடுத்திய கருத்தரங்கு மண்டப கதிரை – தேக்கு | 5,617 | 9,000 | 6,250 | 7,000 |
| 10 | சாப்பாட்டு மேசைக் கதிரை - தேக்கு | 4,038 | 7,500 | 5,100 | 7,000 |

போட்டியாளர் விலையுடன் கல்டிமுல்லவிலுள்ள தளபாடம் உற்பத்தி செய்யும் பொறியின் விற்பனை விலையையுடன் ஒப்பீடு செய்தல்.




மேற்குறித்த அட்டவணை மற்றும் வரைபடத்தின்படி, கல்டிமுல்லவிலுள்ள தளபாடம் உற்பத்தி செய்கின்ற பொறியின் அனைத்துப் பொருட்களின் விலைகள் ஏனைய நிறுவனங்களை விடக் குறைவாகவுள்ளன.

விற்பனை விலை அதன் போட்டியாளர்களின் விலையை விடக் குறைவாக உள்ள போதிலும் கல்டிமுல்லவிலுள்ள தளபாடம் உற்பத்தி செய்கின்ற பொறியின் போட்டி நிலைமை முன்னேற்றமடைந்திருக்கவில்லையெனக் குறிப்பிடுவது பொருத்தமாகவுள்ளது.

**வலியுறுத்திக் கூறல்**

உற்பத்திக் கிரயம் மற்றும் ஏனைய தொடர்புள்ள கிரயங்களை ஈடுசெய்வதற்கு விற்பனை விலை இல்லாததினால் சந்தை மற்றும் நடைமுறைக் கிரயக் கட்டமைப்பிற்குச் சமமாக விலைகளை நிர்ணயிக்க தவறியமை காரணமாக கேஎவ்எமிபி நட்டமடைந்துள்ளது.

**சிபார்சு**

போட்டிச் சந்தை விலைகள் மற்றும் கல்டிமுல்லவிலுள்ள தளபாடம் உற்பத்தி செய்கின்ற பொறியில் கிரய கட்டமைப்பு ஆகிய இரண்டினையும் கருத்திற்கொள்ளும் போது யதார்த்தமான விலையிடல் பொறிமுறை அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

**அரச மரக் கூட்டுத்தாபனத்தின் பதில்**

கல்டிமுல்லவிலுள்ள தொழிற்சாலையில் உற்பத்திக் கிரயம் தயாரிக்கப்பட்டதும் அது தலைமை அலுவலகத்திலுள்ள விலையிடல் குழுவிற்கு அனுப்பப்படுகிறது. உற்பத்திக் கிரயத்தையும் சந்தைக் கிரயத்தையும் கவனத்தில் கொண்டு விலையிடல் குழுவினால் இறுதி விலைகள் நிர்ணயிக்கப்பட்டுள்து. பின்னர் மத்தியப்படுத்தப்பட்ட கிரயமிடல் செயன்முறைக்கு அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் ஈஆர்பி முறைமையினை அறிமுகப்படுத்தியது.

## 3.2 உள்ளபடியான செலவின முன்வரைவுடன் நியமக் கிரய கட்டமைப்பு பேணப்படுவதில்லை.

**அவதானிப்புக்கள்**

கல்டிமுல்லவிலுள்ள தளபாடம் உற்பத்தி பொறியானது 1992 இல் தனியார் ஆலோசனையளித்தல் நிறுவனத்தால் விருத்தி செய்யப்பட்ட நியம கிரயமிடல் முறைமை இன்னமும் பயன்படுத்தப்படுகின்றது. ஆலோசனை அறிக்கை ஊடாக நிர்ணயிக்கப்பட்டிருந்த பின்வரும் மேந்தலை உறிஞ்சுதல் வீதங்கள் வெட்டுப் புள்ளியினைப் பூர்த்தியாக்குவதற்கு போதாதிருந்தது.

- ஒரு கன மீற்றருக்கு இல. ரூபா. 3.37 இல் தொழிற்சாலை மேந்தலைகள்
- ஒரு கன மீற்றருக்கு இல. ரூபா. 3.53 இல் வெட்டுதல் மற்றும் திட்டமிடல்
- ஒரு கன மீற்றருக்கு இல. ரூபா. 2.50 இல் இயந்திர கிரயம்

மேலும் கடந்த ஐந்து ஆண்டுகளிற்கான ஒரு கன மீற்றருக்கான (இல. ரூபா 4.10) பதப்படுத்தல் அட்டவனைகளின் கிரயம் திருத்தப்பட்டிருக்கவில்லை.

18 ஆண்டுகளிற்கு முன்னர் விருத்தி செய்யப்பட்டிருந்த நியம கிரயமிடல் முறைமையை பயன்படுத்தி கல்டிமுல்லவிலுள்ள தளபாடம் உற்பத்தி செய்கின்ற பொறி விற்பனை விலையை நிர்ணயிக்கின்ற போதிலும் நாங்கள் சில தளபாடங்கள் விற்கப்பட்ட

உள்ளபடியான விற்பனை விலை கீழே அட்டவனையில் விபரிக்கப்பட்டவாறு நியம விற்பனை விலையை விட குறிப்பிடத்தக்களவு குறைவாக உள்ளமை அவதானிக்கப்பட்டது.

முந்திய புள்ளியில் (3.1) இல் அவதானிக்கப்பட்டவாறு, கல்டிமுல்லவிலுள்ள தளபாடம் உற்பத்தி செய்கின்ற பொறியின் தற்போதைய விற்பனை விலை சந்தை போட்டியாளர் விலையை விட மிகவும் குறைவாகவுள்ளதென குறிப்பிடுவது முக்கியத்துவமாகவுள்ளது.

| | **தளபாட விடயம்** | **நியம கிரய தாள்களின்படி விற்பனை விலை (இல.ரூபா)** | **உள்ளபடியான விற்பனை விலை (இல.ரூபா)** | **வித்தியாசம் (இல.ரூபா)** |
|---|---|---|---|---|
| 1 | விரிவுரை மண்டப கதிரை- முதிரை | 3,242 | 2,653 | 589 |
| 2 | கைப்பிடிக் கதிரை - முதிரை | 3,045 | 2,228 | 817 |
| 3 | ஏழுதுனர் கதிரை - முதிரை | 11,394 | 10,591 | 803 |
| 4 | கனிஷ்ட நிறைவேற்றுனர் மேசை – முதிரை | 18,865 | 14,479 | 4,386 |
| 5 | ஒற்றைபடுக்கைக் கட்டில் - தேக்கு | 18,823 | 18,525 | 298 |
| 6 | சாதாரண கதிரை - முதிரை | 2,762 | 1,944 | 818 |
| 7 | இரட்டை படுக்கை கட்டில் - தேக்கு | 28,450 | 22,700 | 5,750 |
| 8 | சாதாரண மேசை - முதிரை | 6,756 | 7,527 | (771) |
| 9 | சொகுசுபடுத்திய கருத்தரங்கு மண்டப கதிரை – தேக்கு | 4,553 | 5,617 | (1,064) |
| 10 | சாப்பாட்டு மேசைக் கதிரை - தேக்கு | 4,629 | 4,038 | 591 |

8 மற்றும் 9 ஆம் விடயங்களைத் தவிர்த்து, ஏனைய சகல விடயங்களும் அவற்றினுடைய நியம விற்பனை விலையை விடக் குறைவாக விற்கப்பட்டன.

**வலியுறுத்திக் கூறல்**

கல்டிமுல்லவிலுள்ள தளபாடம் உற்பத்தி செய்கின்ற பொறி விற்பனை விலையை நிர்ணயிப்பதில் வழிகாட்டியாக ஒவ்வொரு தளபாட விடயத்திற்காகவும் நியம கிரயத்தை பயன்படுத்துகின்றது. நீண்ட காலமாக நியம கிரயம் திருத்தப்பட்டிருக்காததன் விளைவாகவும் நியம விற்பனை விலையுடன் ஒத்திருக்காத விலையில் தளபாடம் விற்பனை

செய்தும், கல்டிமுல்லவிலுள்ள தளபாடம் உற்பத்தி செய்கின்ற பொறி அதன் தளபாடங்களை நட்டத்தில் விற்கின்றது.

**சிபார்சு**

- நியம கிரயமிடல் கட்டமைப்பு தற்போதைய சந்தை விலைக்குச் சமமாக திருத்தப்பட வேண்டியதுடன் தற்போதைய கிரய கட்டமைப்பு மற்றும் போட்டி சந்தை விலை என்பவற்றினை கருத்திற் கொள்வதன் மூலம் தளபாட விற்பனை விலையை நிர்ணயத்தல் சரி செய்ய வேண்டும்.
- கேஎவ்எம்பி விற்பனை முறைமைகளையும் தன்னியக்க விலையிடல் மற்றும் பட்டியலிடல் நடைமுறைகளையும் அறிமுகப்படுத்துவதனை கருத்தில் கொள்ள வேண்டும். இது கைநூல் நடைமுறைகளை கேஎவ்எம்பி தற்போது பின்பற்றுகின்ற அகற்றும் மற்றும் வினைத்திறன்களை அதிகரிக்கும்.

**அரச மரக் கூட்டுத்தாபனத்தின் பதில்**

முன்னர் அரச மரக் கூட்டுத்தாபனம் கூப்பசின் முறைமையை அடிப்படையாகக் கொண்டு அதன் தளபாடக் கிரயமிடலை செயற்படுத்தியது. தற்போது அரச மரக் கூட்டுத்தாபனம் கிரயமிடலிற்காக ஈஆர்பி முறையை அறிமுகப்படுத்தியது.

## 3.3 தளபாடங்களின் அளவு மற்றும் அது கல்டிமுல்லவிலுள்ள தளபாடம் உற்பத்திசெய்கின்ற பொறியின் வெட்டுப்புள்ளியினை ஏற்படுத்துவதற்கு விற்கப்பட வேண்டிய அளவாகும்.

**அவதானிப்பு**

கேளவ்எம்பி வெட்டுப் புள்ளியை அடைய வேண்டிய புள்ளியினை நிர்ணயிக்கும் வகையில் (இலாபம் அல்லாத, நட்டமல்லாத) 10 தெரிவு செய்யப்பட்ட தளபாட விடயங்களிற்காக கீழே கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டது.

ஒரு சமயத்தில் ஒரு விடயம் மாத்திரம் உற்பத்தி செய்யப்படுகின்றதென்ற கருதுகோளின் அடிப்படையில் அந்த பெறுமதிகள் கணிப்பிடப்பட்டன.

| | விரிவுரை மண்டப கதிரை | கைப்பிடிக் கதிரை | ஏழுதுனர் கதிரை | கனிஷ்ட நிறை வேற்றுனர் மேசை | ஒற்றை படுக்கைக் கட்டில் | சாதாரண கதிரை | இரட்டை படுக்கை கட்டில | சாதாரண மேசை | சொகுசுபடுத்திய கருத்தரங்கு மண்டப கதிரை | சாப்பாட்டு மேசைக் கதிரை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஒரு அலகிற்கான விற்பனை விலை | 2,653 | 2,228 | 10,591 | 14,479 | 18,525 | 1,944 | 22,700 | 7,527 | 5,617 | 4,038 |
| கழி: | | | | | | | | | | |
| ஒரு அலகிற்கான மாறுபட்ட கிரம் | (1,775) | (1,557) | (6,465) | (11,404) | (14,913) | (1,197) | (23,496) | (8,135) | (2,033) | (2,685) |
| ஒரு அலகிற்கான பங்களிப்பு | 878 | 671 | 4,126 | 3,075 | 3,612 | 747 | (796) | (608) | 3,584 | 1,353 |
| அளவு | 6,772 | 8,860 | 1,441 | 1,934 | 1,646 | 7,962 | * | * | 1,659 | 4,395 |
| நிலையான கிரயம் | (5,945,957) | (5,945,957) | (5,945,957) | (5,945,957) | (5,945,957) | (5,945,957) | | | (5,945,957) | (5,945,957) |
| வெட்டுப்புள்ளி | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | | | 0 | 0 |

- இரட்டைக் கட்டில் மற்றும் சாதாரண மேசை என்பவற்றில் விற்பனை விலைகள் மாறும் கிரயத்தினை விடக் குறைவாக உள்ளதால் அப்பொருட்களிற்காக வெட்டும் புள்ளி அளவினை எங்களால் கணக்கிட முடியாதிருந்தது.

2009 ஆம் ஆண்டிற்கான உள்ளபடியான விற்பனை அளவுகள் வெட்டுப் புள்ளி அளவுகளுடன் ஒப்பிட்ட போது, உள்ளபடியான அளவுகள் வெட்டுப்புள்ளி அளவுகளை மிகவும் குறைவாக உள்ளதென குறிப்பிடப்பட்டிருந்தது. ஆதலால், கேளவ்ளம்பி குறிப்பிடத்தக்களவு நட்டம் அடைவதனை விளைவித்துள்ளது.

2009 ஆம் ஆண்டிற்கான வெட்டுப் புள்ளி அளவுக்கும் உள்ளபடியான அளவுக்கும் இடையிலான ஒப்பீட்டை கீழேயுள்ள அட்டவணை விபரிக்கிறது.

| | **தளபாட விடயம்** | **வெட்டுப்புள்ளிக்கு உற்பத்திசெய்ய வேண்டிய அளவு அலகுகள்** | **உள்ளபடியான உற்பத்தி அளவு (2009) அலகுகள்** | **வித்தியாசம் அலகுகள்** |
|---|---|---|---|---|
| 1 | விரிவுரை மண்டப கதிரை | 6,772 | 2,227 | 4,545 |
| 2 | கைப்பிடிக் கதிரை | 8,860 | 967 | 7,893 |
| 3 | எழுதுனர் கதிரை | 1,441 | 152 | 1,289 |
| 4 | கனிஷ்ட நிறைவேற்றுனர் மேசை | 1,934 | 98 | 1,836 |
| 5 | ஒற்றை படுக்கை கட்டில் | 1,646 | 26 | 1,620 |
| 6 | சாதாரண கதிரை | 7,962 | 203 | 7,759 |
| 7 | இரட்டை படுக்கை கட்டில் | 7,469 | 16 | 7,453 |
| 8 | சாதாரண மேசை | 9,782 | 34 | 9,748 |
| 9 | சொகுசுபடுத்திய கருத்தரங்கு மண்டப கதிரை | 1,659 | 44 | 1,615 |
| 10 | சாப்பாட்டு மேசைக் கதிரை | 4,395 | 54 | 4,341 |

**வலியுறுத்திக் கூறல்**

சாதகமான பங்களிப்பை உருவாக்கும் தளபாடங்களின் பொருத்தமான கலவையை தெரிவு செய்யத் தவறியமையினாலும் வெட்டுப்புள்ளி அளவுக்கு அதிகமாக உற்பத்தி செய்யாமையாலும் கேளவ்ளம்பி ஆனது பல ஆண்டுகளாக நட்டத்தினை அடைந்திருந்தது.

**சிபார்சு**

பெற்றுக்கொள்ளக்கூடிய மட்டுப்பாடான வளங்களிற்குள் (தொழிலாளர், இயந்திரம் போன்ற) வியாபாரத்திற்கு சாதகமான பங்களிப்பை வழங்குகின்ற அதிக இலாபம் தரக்கூடிய

உற்பத்திக் கலவையையும் அத்துடன் தெரிவுசெய்யப்பட்ட விற்பனைக் கலவைகளிற்கான சந்தைக் கேள்வியையும் கேளவ்ளம்பி தெரிவு செய்ய வேண்டும்.

**அரச மரக் கூட்டுத்தாபனத்தின் பதில்**

கல்டிமுல்லயினை உள்ளக்கிய அனைத்துச் சிக்கல்களிற்காகவும் வருடாந்த உற்பத்தி திட்டத்தை அரச மரக் கூட்டுத்தாபனம் தயாரிக்கின்றது. இந்த திட்டம் தயாரிப்பதற்காக நாங்கள் விரைவாக நகரும் வீட்டு பாவனைப் பொருள் மற்றும் அலுவலக தளபாடங்களின் உற்பத்தி அதன் பின்னரான ஏனைய தளபாடங்களின் கலவையினைக் கவனத்தில் எடுத்தும் முன்னுரிமை வழங்குகிறோம் அறிக்கையில் சிபார்சுசெய்யப்பட்ட வெட்டுப்புள்ளிப் அளவானது எங்களுடைய வளங்களின் மட்டுப்பாடு மற்றும் சந்தைப் போக்கின் அடிப்படையில் யதார்த்தமற்றதாகும். அரச மரக் கூட்டுத்தாபனம் அதன் இலாபத்தன்மையை ஏற்படுத்துவதற்கு நிலையான மற்றும் ஏனைய மாறும் கிரயங்களைக் குறைப்பதன் மூலம் சிபார்சுசெய்யப்பட்ட வெட்டுப்புள்ளி அளவை குறைப்பதற்கு முயற்சிசெய்யும்.

# பகுதி II

## 3.4 காட்சியறைகளின் அமைவிடம் மற்றும் பௌதீக உட்கட்டமைப்பு ஏற்றுக்கொள்ளக்கூடிய நியமங்களுக்கமைய இருக்கவில்லை.

**அவதானிப்புக்கள்**

காட்சியறையின் தோற்றம் வேலி மற்றும் மரங்களால் மறைக்கப்படுவதனால் வாடிக்கையாளரைக் கவருவதற்கு காட்சியறையானது முறையான இடத்தில் அமைக்கப்பட்டிருக்கவில்லை என்று நாங்கள் அவதானித்தோம்.

காட்சியறை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசேட அவதானிப்புகளின் புகைப்படங்களில் சில கீழே தரப்படுகின்றது.

- காட்சியறையின் தோற்றம் வாடிக்கையாளரைக் கவரக் கூடியவாறு இருக்காததுடன் கட்டிடத்தின் முன்பகுதி வேலிகளும் மரங்களும் மூடப்பட்டிருந்தது. இது காலி வீதியில் பயணம் செய்யும் எதிர்கால வாடிக்கையாளரின் பார்வைக்கு காட்சியறையின் தோற்றத்தினை மறைத்தது.



- கவரக் கூடிய மற்றும் முக்கியமான பெயர்ப் பலகை அல்லது பதாதைகள் காட்சியறையின் முன்பக்கத்தில் வெளியிடப்பட்டிருக்கவில்லை.



- காற்றோட்டம், வெளிச்சம், தளபாடங்களை வெளிக்காட்டுதல் போன்ற உள்ளக ஒழுங்குகள் திருப்தியான மட்டத்தில் காணப்பட்டிருக்கவில்லை. தளபாடங்கள் காட்சியறையின் எல்லா இடங்களிலும் பரவிக் காணப்பட்டதுடன் எதிர்கால வாடிக்கையாளர்களின் கவனத்தை கவரும் வகையில் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.



## 3.5 காட்சியறையின் மட்டுப்படுத்தப்பட்ட செயற்பாட்டு மணித்தியாலங்கள்

- காட்சியறையானது கிழமை நாட்களின் போது மு.ப 8.00 முதல் பி.ப 4.30 வரையும் சனிக்கிழமைகளில் மு.ப 8.00 முதல் பி.ப 1.00 மணிவரை செயற்படுகிறது.

  வார நாட்களிலும் விசேடமாக வார இறுதி நாட்களிலும் தாமதமாக பொருட்களை வாங்குவதற்கு பல வாடிக்கையாளர்கள் விரும்புவதனால் காட்சியறையின் மட்டுப்படுத்தப்பட்ட செயற்பாட்டு மணித்தியாலங்கள் அதிக வாடிக்கையாளர்களை கவரும் அதன் இயலுமைக்கு தடையாகவுள்ளது.


**வலியுறுத்திக் கூறல்**

மிகவும் சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்ட தளபாட வியாபாரத்தில் காட்சியறையில் வசதியற்ற அமைவிடம், தோற்றம் மற்றும் உட்கட்டமைப்பு வசதி (வெளிச்சம், காற்றோட்டம் போன்றன) கேஎவ்எம்பி இன் போட்டித் தன்மையினை மோசமாக பாதித்துள்ளது.

**சிபார்சுகள்**

- அமைவிடம் வாடிக்கையாளரை மிகவும் கவருவதற்கு முறையான சந்தைப்படுத்தல் தந்திரோபாயங்கள் மற்றும் காட்சியறையின் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை கேஎவ்எம்பி அறிமுகப்படுத்த வேண்டும்.
- அலுவலக நேரத்தின் பின்னர் மற்றும் வார இறுதி நாட்களில் ஓய்வாக பொருட்களை வாங்குவதற்கு அநேக வாடிக்கையாளர்கள் விரும்புவதனால் காட்சியறையின் செயற்படு மணித்தியாலங்களை நீடிக்க வேண்டும்.
- கேஎவ்எம்பி காட்சியறையில் தளபாடங்களை காட்சிப்படுத்தலை மேம்படுத்தும் நோக்கில் போட்டியாளர்களின் காட்சிப்படுத்தல் தந்திரோபாயங்களை ஆய்வுசெய்தல்.
- கேஎவ்எம்பி இல் காட்சிப்படுத்தல் எதிர்பாராமல் நிகழ்வதற்கு முறையாக ஒழுங்கமைக்கப்பட்ட தளபாட காட்சியறைகளின் எடுத்துக்காட்டுகளுடன் நுணுக்கமாக மாறாதவற்றின் எடுத்துக் கூறல்களுடன் கீழே புகைப்படங்கள் உள்ளன.





**அரச மரக் கூட்டுத்தாபனத்தின் பதில்**

அரச மரக் கூட்டுத்தாபனமானது புதிய கலைக் காட்சியறையினை நிர்மாணிப்பதற்கும் சுற்றுப்புற சுற்றாடலை உள்ளடக்கி தற்போதுள்ள காட்சியறைகளை தரமுயர்த்துவதற்கும் 2013 பாதீட்டில் நிதிகளை ஒதுக்கியுள்ளது. உற்பத்திப் பொருட்களதும் காட்சியறையினதும் அச்சிட்ட புகைப்படங்கள் சரியான சூழ்நிலையினையும் புகைப்பட பிடிப்பாளர்களின் புகைப்படங்களையும் சரியாக வெளிப்படுத்தவில்லை.

சிபர்சுசெய்யப்பட்டவாறு, விதந்துரையாக காட்சியறை திறக்கும் நேரங்களை நீடிப்பதற்கான சாத்தியங்களை அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் வெளிப்படுத்தும்.

## 3.6 கேஎவ்எம்பி ஆல் முறையான சந்தைப்படுத்தல் திட்டமொன்று உருவாக்கப்பட்டிருக்கவில்லை

**அவதானிப்பு**

கேஎவ்எம்பி தொடர்பான சந்தைப்படுத்தல் நடவடிக்கைகள் அரச மரக் கூட்டுத்தாபனத்தின் சந்தைப்படுத்தல் பிரிவால் செயற்படுத்தப்படுகின்றன. எவ்வாறாயினும், அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் சந்தைப்படுத்தல் பிரிவோ அல்லது கல்டிமுல்லவிலுள்ள தளபாடம் உற்பத்தி செய்யும் பொறியோ சந்தைப்படுத்தல் திட்டத்தினைக் கொண்டிருக்கவில்லை எனபதனை நாங்கள் அவதானித்தோம் பதிலாக, அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தினால் வடிவமைக்கப்பட்ட கேஎவ்எம்பி இனை தனியாக விபரிக்கும் செயல்நடவடிக்கைத்திட்டம் பயன்படுத்தப்படுகின்றது.

**வலியுறுத்திக் கூறல்**

நன்கு எழுதப்பட்ட மற்றும் விபரமான சந்தைப்படுத்தல் திட்டமானது வியாபாரத்தின் பிரதான அம்சமாகும் ஏனெனில் இது எவ்வாறு வாடிக்கையாளரை கவர்ந்து நிலைத்திருக்கச் செய்வதற்கும் கேஎவ்எம்பி எவ்வாறு திட்டமிடுகின்றது என்பதனை இது விபரிப்பதுடன் கேஎவ்எம்பி தனது விற்பனைகளை மேப்படுத்துவதற்கு அதன் நடவடிக்கைகளை எவ்வாறு மேற்கொள்ளவேண்டும் என்பதற்கான வழிகாட்டல்களை வழங்குகின்றது.

கேஎவ்எம்பி அதன் சொந்த சந்தைப்படுத்தல் திட்டத்தை வைத்திருப்பதன் மூலம் பின்வரும் சில அனுகூலங்களை அடைந்து கொள்ளலாம்.

முறையாக கட்டமைக்கப்பட்ட சந்தைப்படுத்தல் திட்டம்:

- வாடிக்கையாளர்களின் தேவைகள் மற்றும் விருப்பங்கள் இனங்காணல்
- உற்பத்திப் பொருட்களிற்காக தேவைகளை நிர்ணயித்தல்.
- வாடிக்கையாளர்களின் துல்லியமான தேவைகளை நிறைவேற்றும் உற்பத்திப் பொருட்களை வடிவமைப்பதில் உதவியளித்தல்
- நாளாந்த செயற்பாடுகளின்றான பணத்தினை உருவாக்குதல், கடனைத் திருப்பிச் செலுத்துவதில் இலாபத்தினை உழைத்தல் என்பவற்றிற்கான முயற்சிகளை விளக்குதல்
- போட்டியாளர்களை இனங்காணல் மற்றும் உற்பத்திப் பொருட்களையும் அதன் போட்டி நலன்களையும் பகுப்பாய்வு செய்தல்.
- புதிய உற்பத்திப் பகுதிகளை இன்ங்காணல்

- புதிய மற்றும் / அல்லது எதிர்கால வாடிக்கையாளரை இனங்காணல், மற்றும்
- தந்திரோபாயங்கள் விரும்பிய பெறுபேறுகளை வழங்குகின்றதா என்பதை பார்ப்பதற்கான பரிசோதனைக்கு அனுமதித்தல்.

சந்தைப்படுத்தல் திட்டம்மொன்றை வைத்திருக்காமையானது மேற்கூறிய அனுகூலங்களிலிருந்து பெற்றுக்கொள்ளும் நலன்களை அடைந்து கொள்வதிலிருந்து கேஎவ்எம்பி இனைத் தடுக்கும்.

**சிபார்சுகள்**

கேஎவ்எம்பி மற்றும் அரச மரக்கூட்டுத்தாபனத்தின் கேஎவ்எம்பி இற்காக தனிச்சிறப்பான விரிவான சந்தைப்படுத்தல் திட்டமொன்றை விருத்தி செய்யவேண்டியதுடன் விருத்தி செய்யப்பட்ட திட்டத்திற்கமைய அதன் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளை நடாத்த வேண்டும்.

**அரச மரக் கூட்டுத்தாபனத்தின் பதில்**

கல்டிமுல்ல கட்டிடத் தெகுதியின் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகள் அரச மரக் கூட்டுத்தாபனத்தின் சந்தைப்படுத்தல் பிரிவால் செயற்படுத்தப்படுகின்றது. விதந்துரைக்கப்பட்டவாறு அரச மரக் கூட்டுத்தாபனமானது கேஎவ்எம்பி இனால் அமுலாக்குவதற்கு தனிச்சிறப்பான விரிவான சந்தைப்படுத்தல் திட்டமொன்றை விருத்திசெய்ய வேண்டும்.

## 3.7 ஊக்குவிப்பு பிரச்சாரங்களும் விளம்பரப்படுத்தல் முறைகளும்

**அவதானிப்புக்கள்**

- அரச மரக் கூட்டுததாபனமானது 2010 ஏப்ரல் மாதத்தில் அரச மரக் கூட்டுத்தாபன ஊழியர்கள் மற்றும் ஏனைய அரச துறை ஊழியர்களிற்கு 'பிரஷாத அபிமானி' என்றழைக்கப்படும் தளபாடப் பொதியொன்றை அறிமுகப்படுத்தியதென நாங்கள் அவதானித்தோம். அரச மரக் கூட்டுத்தாபனமானது ஊக்குவிப்பு தொடர்பான பிரசாரம் மற்றும் விளம்பரப்படுத்தலில் ஏறத்தாழ இல.ரூபா 468,270 ஐ செலவழித்திருந்தது. 2010 ஏப்ரல் 06 முதல் 2010 ஆகஸ்ட் 14 வரையான காலத்தின் போது இப்பொதியின் கீழான விற்பனைகள் ரூபா 1,548,430 ஆகும்.

- ‘பிரஷாத அபிமானி’ பொதியில் உள்ளடக்கப்பட்டிருக்காத இல. ரூபா 505,551 தொகையான தளபாடங்கள் 10 சதவீத விசேட கழிவு வழங்குவதன் மூலம் இந்த பொதியின் கீழ் விற்கப்பட்டிருந்தது.

**வலியுறுத்திக் கூறல்**

- பொதியின் கீழ் திட்டமிடப்பட்ட விற்பனைகளுடன் தொடப்புபட்டிருக்காத விளம்பரங்களின் மீது ஏற்படுகின்ற செலவினம் நட்டத்தினை ஏற்படுத்தும்.
- கழிவுகளுடன் ‘பிரஷாத அபிமான’ பொதியில் உள்ளடக்கப்படாத தளபாடங்களை விற்பனை செய்வதன் மூலம் கேளவ்ளம்பி இன் வருமானம் இழக்கப்படுவதற்கு வழிவகுக்கும்.

**சிபார்சுகள்**

திட்டமிட்ட விற்பனைகளைக் கவனத்தில் கொண்டு விளப்பரங்களின் மீது சிக்கனத்தைக் கடைப்பிடித்தல் மற்றும் வாடிக்கையாளருக்கு தளபாட பொதிகளை வழங்கும் போது பொதிகளின் சேர்மானம் தொடர்பான முகாமைத்துவ தீர்மானங்களிலிருந்தான முரண்பாடுகளைத் தவிர்த்தல்.

**அரச மரக் கூட்டுத்தாபனத்தின் பதில்**

2010 இலிருந்து நாங்கள் பல விளப்படுத்தல்கள் மற்றும் ஊக்குவிப்பு பிரச்சாரங்களை தொடங்கியிருந்தோம்.

- ‘பிரஷாத அபிமானி’ பொதி - அரச மரக் கூட்டுத்தாபனம் மற்றும் அரச துறை ஊழியர்களிற்கு இலகுவான கொடுப்பனவு திட்டத்தின் மீது ரூபா 200,000 எல்லைவரை தளபாடங்களை விற்பனை செய்வதற்கான ஊக்குவிப்பு
- முதற் தடவையாக கூட்டுத்தாபனத்தினுடைய தளபாடங்களை மாலைதீவு கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டதுடன் பல வாடிக்கையாளர்களை கவர்ந்திருந்ததுடன் காட்சிப்படுத்தப்பட்ட சகல தளபாடங்களும் விற்கப்பட்டதுடன் தளபாடம் வழங்கலிற்காக கட்டளைகள் பெறப்பட்டன.
- பல வாடிக்கையாளர்களின் வேண்டுகோளின் பேரில் தற்போது சிறிய அளவான தளபாட கொள்வனவிற்காக இலத்திரனியல் கடன் அட்டைகள் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இதன் காரணமாக சந்தைவாய்ப்பு அதிகரிக்குமென நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

- விளம்பரப்படுத்தல்கள் மற்றும் ஊக்குவிப்பு நடவடிக்கைகள் உடனடியாக வெகுமதிகளைக் கொண்டுவராது பெறுபேற்றினைப் பெறுவதற்கு சில காலம் எடுக்கும்.

## 3.8. காட்சியறை உத்தியோகத்தர்களின் பயிற்சித் தேவைகள்

**அவதானிப்பு**

இரத்மலானை காட்சியறையின் வாடிக்கையாளர் தொடர்புகள் மற்றும் விற்பனை நடவடிக்கைகளில் 06 உத்தியோகத்தர்களை கேஎவ்எம்பி ஈடுபடுத்தியிருந்தது. எவ்வாறாயினும், வாடிக்கையாளர் தொடர்புகள், விற்பனைகள், சந்தைப்படுத்தல் மற்றும் வியாபாரத்தினை நடாத்துவது தொடர்பான ஏனைய நடவடிக்கைகள் மீது எந்த உத்தியோகத்தர்களிற்கும் எவ்வித பயிற்சியும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

வாடிக்கையாளர் தொடர்புகள் மற்றும் விற்பனைகளைத் தூண்டும் தந்திரோபாயங்கள் போன்றவற்றில் பயிற்சியானது வியாபாரமானது வெற்றிகரமாக செயற்படுத்துவதற்கு அத்தியாவசியமாக உள்ளதுடன் அவை இல்லையாயின் அது காட்சியறையின் செயலாற்றலை மோசமாகப் பாதிக்கும்.

காட்சியறையில் ஈடுபடுத்தப்பட்ட உத்தியோகத்தர்கள் வாடிக்கையாளர் தொடர்புகள் மற்றும் விற்பனைகளைத் தூண்டும் தந்திரோபாயங்கள் மற்றும் காட்சியறை முகாமைத்துவம் என்பவற்றில் பயிற்சி வழங்கப்பட வேண்டும்.

**வலியுறுத்திக் கூறல்**

வாடிக்கையாளர் முன்தோன்றும் உத்தியோகத்தர்களிற்கான முறைசார்ந்த பயிற்சியின்மையானது தரம் குறைந்த சேவை இட்டுச் செல்லாமை மற்றும் குறைவான வாடிக்கையாளர் தொடர்புகளானது இறுதியாக காட்சியறையின் செயலாற்றலைப் பாதிக்கலாம்.

**சிபர்சுகள்**

காட்சியறையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள சகல உத்தியோகத்தர்களிற்கும் முறையான பயிற்சி வழங்கப்பட வேண்டும்.

**அரச மரக் கூட்டுத்தாபனத்தின் பதில்**

அரச மரக் கூட்டுத்தாபனமானது மர வேலையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களின் வேலைப்பாங்கு மற்றும் அந்தஸ்தினை முன்னேற்றுதல் மற்றும் உயர்த்துதலை இலக்காகக் கொண்டுள்ளது. இந்த நோக்கத்திற்காக நாங்கள் பயிற்சியாளர் மற்றும் திறனுடைய தொழிலாளர்களை பயிற்றுவிப்பதற்கு பயிற்சியளித்தல் பிரிவை வைத்திருந்தது. அரச மரக் கூட்டுத்தாபனமானது பயிற்சியளித்தல் நிகழ்ச்சித்திட்டத்தை அமுலாக்குவதற்கு ஒவ்வொரு

ஆண்டும் நிதிகளை ஒதுக்குகிறது. அரச மரக் கூட்டுத்தாபனமானது கல்டிமுல்ல கட்டிட தொகுதிக்காக 2011 இல் உயர் தகைமையுடை தளபாட வடிவமைப்பாளரை சேர்த்துக்கொண்டது. அவர் காட்சியறையின் ஒழுங்குகள் மற்றும் பயிற்சியினைக் கவனிப்பார்.

## 3.9. உண்மையான வளப் பாவனையை இனங்காண்பதற்கான முறைமை

**அவதானிப்பு**

உரிய வேளையில் முகாமைத்துவ தகவல்களை பெறுவதற்கு கேஎவ்எம்பி உரிய முறைமையொன்றை வைத்திருக்கவில்லையென நாங்கள் அவதானித்தோம். இதன்விளைவாக, தொழிற்சாலையால் தயாரிக்கப்பட்ட தளபாடங்களின் மரம், தொழிலாளர், இயந்திரம் மற்றும் ஏனைய நேர் மற்றும் நேரடிக் கிரயங்கள் என்பன தொடர்பான உள்ளபடியான கிரயத் தகவல்கள் முறையாக பெறப்பட்டு கண்காணிக்கப்பட்டிருக்கவில்லை.

**வலியுறுத்திக் கூறல்**

முகாமைத்துவ தகவல் முறைமை (எம்ஐஎஸ்) இன்மையால், கேஎவ்எம்பி இன் செயற்பாடுகளை உரிய வேளையில் கண்காணித்து கட்டுப்படுத்துவது முகாமைத்துவத்திற்குச் சாத்தியமற்றிருந்தது. கைகளால் கணித்தல் / முறைசாரா வழிகளிலிருந்து உருவாக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல் மற்றும் தீர்மானம் எடுத்தலானது வியாபாரத்தின் செயற்திறனற்ற மற்றும் பயனுறுதியல்லாத தீர்மானம் எடுத்தல் மற்றும் காட்டுப்பாட்டிற்கு இட்டுச் செல்லலாம்.

**சிபார்சுகள்**

சரியான மற்றும் உரிய தகவல்களை பெறுவதற்குத் தூண்டிய முகாமைத்துவ தகவல் முறைமையானது (எம்ஐஎஸ்) கேஎவ்எம்பி இன் செயலாற்றல் தொடர்பில் மேற்பார்வை மற்றும் தந்திரோபாய தீர்மானம் எடுத்தலிற்காக அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

**அரச மரக் கூட்டுத்தாபன்தின் பதில்**

வளப்பயன்பாடு, உற்பத்தி மற்றும் நிதிசார் முன்னேற்றம் என்பவற்றினைக் கண்காணிப்பதற்கு அரச மரக் கூட்டுத்தாபன முகாமைத்துவம் தகவல் முறைமையினை அறிமுகப்படுத்திய வளப்பயன்பாடு, உற்பத்தி மற்றும் நேர்இணைப்புக் கட்டளை

பூர்த்தியாக்கல் என்பவற்றினை மேற்பார்வை செய்கின்ற ஈஆர்பி கணனி முறைமையை அரச மரக் கூட்டுத்தாபனம் தற்போது பரீட்சிக்கிறது.

## 3.10 பயன்படுத்திய உள்ளபடியான மூலவளங்களை நியம மூலவளங்களுடன் ஒப்பிடல்

**அவதானிப்புகள்**

முகாமைத்துவ தகவல் முறைமை இன்மையால் உற்பத்திச் செயன்முறையில் பயன்படுத்திய உள்ளபடியான மூலவளங்களை நேரடியாக இனங்காண முடியாத போதிலும், 2010 மே, யூன் மற்றும் யூலை மாதங்களிற்கான உற்பத்திச் செயன்முறையில் பயன்படுத்திய உண்மையான மரம், தொழிலாளர் மற்றும் இயந்திர மணித்தியாலங்களை நாங்கள் கணப்பீடு செய்து கேஎவ்எம்பி ஆல் பயன்படுத்திய நியம வளங்களுடன் ஒப்பீடு செய்தோம்.

**மரம்**

பயன்படுத்திய உள்ளபடியான மரங்களானது தேவைப்பட்ட நியம மரத்திற்குச் சமமாகவுள்ளன என நாம் கருதினோம் அத்துடன் பதப்படுத்தல் பொறியிலிருந்து தொழிற்சாலைக்குப் பெற்றுக்கொண்ட மரம் முழுமையாக பயன்படுத்தப்பட்டிருந்தது.

| **மாதம்** | **மே**<br>**கன மீ** | **யூன்**<br>**கன மீ** | **யூலை**<br>**கன மீ** |
|---|---|---|---|
| கூறுகள் உற்பத்தி செய்தல் (ஏ) | 1,871 | 5,483 | 2,444 |
| பூர்த்தியடைந்த பொருட்கள் உற்பத்தி செய்தல் (பீ) | 9,531 | 16,232 | 35,538 |
| மொத்த உற்பத்தி (சீ = ஏ + பீ) | 11,402 | 21,715 | 37,983 |
| மொத்த உற்பத்தி +10 சதவீத கழிவு (டி =சீ *1.1) | 12,542 | 23,887 | 41,781 |
| தொழிற்சாலைக்கு வழங்கப்பட்ட பதப்படுத்திய மரம் (ஈ) | 15,157 | 30,188 | 61,094 |
| வெட்டிய மரத்தின் கழிவு (எவ் = ஈ - டி) | 2,615 | 6,301 | 19,313 |
| ஈ இன் சதவீதமாக வெட்டிய மரத்தின் கழிவு | 21 | 26 | 46 |

தளபாட தொழிற்சாலையின் வழமையான நட்டத்தினை மொத்த உற்பத்தியின் 10 சதவீதமாக நாங்கள் கருதினோம்.

2010 மே, 2010 யூன் மற்றும் 2010 யூலை மாதங்களின் போது பதப்படுத்திய மரங்களின் கழிவு முறையே 21 சதவீதம், 26 சதவீதம் மற்றும் 46 சாதவீதமாக இருந்தன என்பது

அவதானிக்கப்பட்டது இது உற்பத்தி செயன்முறைக்கு மிகவும் உயர்வானது என நாங்கள் கருதுகிறோம்.

**மேற்குறிப்பிட்ட கழிவுக்கான காரணங்கள்**

- வழங்கல் பட்டியலை தயாரிப்பதில் தொழிற்சாலை, பதப்படுத்தும் பொறி மற்றும் மரம் அரியும் ஆலை என்பவற்றிற்கு இடையில் ஒருங்கிணைப்பு இன்மை.
- தேவைகளிற்கு மேலதிகமாக தொழிற்சாலைக்கு பதப்படுத்தும் பொறியிலிருந்து மரத்தினை தொகுதியாக வழங்கல்.
- பதப்படுத்தும் பொறியிலிருந்து தொழிற்சாலையில் பெறப்பட்ட மரங்களின் மொத்த அளவு அவை முழுமையாக பயன்படுத்தப்பட்டதா இல்லையா என்பதைக் கவனிக்காது உற்பத்திச் செயன்முறைக்காக முழுமையாக பயன்பட்டதென கருதப்பட்டிருந்தது. ஒரு மாதத்தில் அவ்வாறு பயன்படுத்தப்பட்ட மரத்தின் கிரயம் அந்த மாதத்தின் மொத்த உற்பத்திக் கிரயத்தில் உள்ளடக்கப்படுகின்றது. எவ்வாறாயினும், பயன்படுத்தப்படாத மரத்தின் மிகையான அளவு தொழிற்சாலை அல்லது தொழிற்சாலைக்கு வெளியே களஞ்சியப்படுத்தப்பட்டிருந்ததுடன் தொழிற்சாலைக்கு வெளியே களஞ்சியப்படுத்தியவை சேதங்களுக்கு உட்படுகின்றது.
- தொழிற்சாலையில் முறையான அடுக்கல் முறைமை இன்மை.
- தொழிற்சாலையின் போதாக்குறைவான கண்காணிப்பும் மேற்பார்வையும் எங்கள் பயணத்தின் போது நாங்கள் பௌதீக ரீதியாக அவதானித்த பின்வரும் திருப்தியற்ற போக்கினை விளைவித்துள்ளது.

  - விற்றுத்தீர்ப்பதற்குரியவை என அடையாளமிடப்பட்ட மர இருப்புக்களில் பயன்படுத்தக்கூடிய மரங்கள் காணப்பட்டன.
  - அரைவாசி பூர்த்தி செய்யப்பட்ட கூறுகள், முறையற்று பொருத்தப்பட்ட பாகங்கள் என்பன பயன்படுத்தப்படாமல் தொழிற்சாலையில் வைத்திருக்கப்பட்டிருந்தன.

**வலியுறுத்திக் கூறல்கள்**

- முறையற்ற உற்பத்தித் திட்டம் மற்றும் நுகர்வின் காரணமாக நுகர்வு உண்மையானதாக இருக்கவில்லை. இது விடுபாடுகளை ஏற்படுத்தியுள்ளது. இதனை பொருட் பதிவேட்டிற்கு கொண்டுவருதல் வேண்டும்.
- ஆக்கபூர்வமான தகவல் முறைமை இன்மையானது உரிய வேளைக்கு மற்றும் நாளதுவரையான தீர்மானம் எடுப்பதனைத் தடுக்கும். (சரியற்ற தன்மை, முறையற்றவை மற்றும் காலங்கடந்தவை)

- தொழிற்சாலையின் நோக்கு மற்றும் குறிக்கோள்களிலிருந்து நெறிப்படுத்தல் மற்றும் வழுவல்கள் விளைந்திருக்க வேண்டிய கண்காணிப்பு இன்மை.
- உட்கட்டமைப்பு வசதிகள் இன்மையால் அதிக அளவு கழிவுகள் மற்றும் பிழையான களஞ்சியப்படுத்தலின் காரணமாக தரமான மரங்கள் பழுதடைந்த சந்தர்ப்பங்கள்.
- கண்காணிப்பு இன்மையானது பணிப்பு இன்மையினையும் தொழிற்சாலையின் தூரநோக்கு மற்றும் குறிக்கோள்களில் குறைபாடுகள் விளைவிக்கும்.

**சிபார்சுகள்**

- தொழிற்சாலை முறையான உற்பத்தி திட்டத்தினை வைத்திருத்தல் வேண்டும். அதில் பிரதான முகாமையாளர்கள் (காட்சியறை தலைவர், மரம் அரியும் ஆலைத் தலைவர், பதப்படுத்தல் பொறியின் தலைவர், மற்றும் தொழிற்சாலையின் தலைவர்) திட்மிடல் செயன்முறையில் ஈடுபட வேண்டும்.
- அரச மரக் கூட்டுத்தபனம் தகவல்களைப் பெறுவதற்கு முகாமைத்துவ தகவல் முறைமையை (எம்ஐஎஸ்) அறிமுகப்படுத்த வேண்டும்.
- நடவடிக்கைகளின் முறையான கண்காணிப்பு.
- உட்கட்டமைப்பு வசதிகளை முன்னேற்றுவதற்கும் கழிவை குறைப்பதற்கும் 5 எஸ் முறைமை அறிமுகப்படுத்தல்.

**தொழிலாளர்**

**அவதானிப்புகள்**

தகவல்/ முகாமைத்துவ தகவல் முறைமையினை பெற்றுக்கொள்ள முடியாமையின காரணமாக, எங்களுடைய அவதானிப்புக்களானது வெட்டுதல் மற்றும் இயந்திரப் பிரிவுகளின் தொழிலாளர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தன.

பின்வரும் சூத்திரத்தை பயன்படுத்தி தெரிவுசெய்யப்பட்ட விடயங்கள் தொடர்பில் உண்மையான ஊழியத்தைக் கூட நாங்கள் கணித்தோம்.

| | | | | |
|---|---|---|---|---|
| தெரிவுசெய்யப்பட்ட விடயங்களிற்கான உண்மையான ஊழிய மணித்தியாலம் | + | உரிய மாதத்திற்கான மொத்த உண்மையான ஊழிய மணித்தியாலம் அந்த மாதத்தில் பயன்படுத்திய உண்மையான மரம் (கியூபிக் டெசிமேற்றர்கள்) | x | குறித்த விடயத்திற்கு ஈடுபடுத்தவேண்டிய மரத்தின் கியூபிக் டெசிமேற்றர்களின் எண்ணிக்கை |

| தளபாட விடயம் | | அலகு ஒன்றிற்கான உண்மையான ஊழிய மணித்தியாலம் (வெட்டுதல், இயந்திரம் மற்றும் பொருத்துதல் பிரிவுகள்) | | |
|---|---|---|---|---|
| | | 2010 மே | 2010 யூன் | 2010 யூலை |
| 1 | விரிவுரை மண்டப கதிரை | 7.88 | 5.33 | 3.14 |
| 2 | கைப்பிடிக் கதிரை | 6.89 | 4.67 | 2.75 |
| 3 | எழுதுனர் கதிரை | 30.15 | 20.41 | 12.03 |
| 4 | கனிஷ்ட நிறைவேற்றுனர் மேசை | 45.92 | 31.09 | 18.32 |
| 5 | ஒற்றை படுக்கை கட்டில் | 44.79 | 30.33 | 17.87 |
| 6 | சாதாரண கதிரை | 5.58 | 3.78 | 2.23 |
| 7 | இரட்டை படுக்கை கட்டில் | 71.4 | 48.34 | 28.48 |
| 8 | சாதாரண மேசை | 37.94 | 25.69 | 15.14 |
| 9 | கருத்தரங்கு மண்டப கதிரை | 4.56 | 3.08 | 1.82 |
| 10 | சாப்பாட்டு மேசைக் கதிரை | 6.43 | 4.35 | 2.57 |

2010 யூலையில் தெரிவுசெய்யப்பட்ட விடயங்களிற்காக பயன்படுத்தப்பட்ட உண்மையான ஊழிய மணித்தியாலம் 2010 மே மற்றும் 2010 யூன் மாதங்களுடன் ஒப்பிடும்போது குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்திருந்தது. ஆனால், தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியாமை காரணமாக அலகு ஒன்றிற்கான ஊழிய மணித்தியாலத்தில் அத்தகைய அதிகூடிய வீழ்ச்சிக்கான எந்தவொரு காரணங்களையும் இனங்காண முடியாதிருந்தது.

நாங்கள் தேவைப்பட்ட நியம ஊழிய மணித்தியாலங்களின் தகவல் கிடைக்காமை காரணமாக அலகு ஒன்றிற்கான நியம ஊழிய மணித்தியாலங்களுடன் அலகு ஒன்றிற்கான உண்மையான ஊழிய மணித்தியாலங்களை ஒப்பிடுவதற்கு முடியாதுள்ளோம்.

**ஊழியப் பயன்பாடு**

2010 மே மாதம் முதல் 2010 யூலை வரை கேஎவ்எம்பி இன் மரம் வெட்டும் மற்றும் இயந்திரப் பிரிவுகளில் கிடைத்த உண்மையான ஊழிய மணித்தியாலங்கள் பின்வருமாறு உள்ளன.

| பிரிவு | மே | யூன் | யூலை |
|---|---|---|---|
| வெட்டுதல் | 1,311 | 1,551 | 1,603 |
| இயந்திரம் | 1,727 | 2,043 | 2,369 |
| கிடைத்த ஊழிய மணித்தியாலம் | 3,038 | 3,594 | 3,972 |
| பயன்படுத்தப்படாத ஊழிய மணித்தியாலம் | 1,331 | 1,897 | 2,432 |
| சதவீதமாக பயன்படுத்தப்படாத ஊழிய மணித்தியாலம் | 44 % | 53 % | 61 % |

2010 யூலையில் உண்மையான ஊழிய மணித்தியாலங்கள் 2010 யூன் மாதத்துடன் ஒப்பிடும்போது 20 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் 2010 யூன் மாதத்தில் உள்ளபடியான ஊதியம் 2010 மே மாதத்துடன் ஒப்பிடும் போது 15 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. 2010 யூன் மாதத்துடன் ஒப்பிடும் போது 2010 யூலை மாதத்தில் மொத்த உற்பத்தி 64 சதவீதத்தால் ஆல் அதிகரித்திருந்ததுடன் யூன் மாதத்தில் மொத்த உற்பத்தி மே மாதத்துடன் ஒப்பிடும் போது 90 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

அத்தகைய பயன்படுத்தப்படாத ஊழிய மணித்தியாலங்களிற்கான பிரதான காரணம் முறையான உற்பத்தித் திட்டம் கிடைக்காமையை எடுத்துக் கூற முடிந்தது.

**வலியுறுத்திக் கூறல்**

- பயன்படுத்தப்படாத ஊழியமானது தளபாடங்களுக்கு மேலதிக கிரயத்தை விளைவித்திருந்தது.
- தொழிற்சாலையின் ஊழியர் தேவைப்படுகளுடன் ஒப்பிடுகையில் பெற்றுக்கொள்ளக்கூடிய தொழிலாளர் தேவையானவற்றைவிட அதிகமாக உள்ளது.
- ஊக்குவிப்பு மட்டம் குறைக்கப்பட வேண்டும்.
- ஏனைய ஊழியர்கள் மீது பயனற்ற ஊழியத்தின் பாதகமான ஆதிக்கம்.
- ஒரு அலகிற்கான மேலதிக கிரயத்தின் அதிகரிப்பு.
- தொழிலாளர் அமைதியின்மை மற்றும் தொழிற்சங்க நடவடிக்கைகள் என்பவற்றை விளைவிக்கும்.

**சிபார்சுகள்**

- வேலை அட்டைகளை உள்ளடக்கும் முறையான உற்பத்தி திட்டமிடல் முறைமை ஒவ்வொரு உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களிற்காகவும் அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

- தொழிலாளரின் செயலாற்றலின் அடிப்படையில் மிகையூதியம்/ ஊக்குவிப்பு திட்டம் அறிமுகப்படுத்தல்.
- தொழிலாளர் செயலாற்றல் மாதாந்தம் குறிப்பிட வேண்டியதுடன் பின்னூட்டல் வழங்கப்படவேண்டியதுடன் நியமத்தின்படி செயற்பட்டிருக்காத உத்தியோகத்தர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- கிடைத்த ஊழியத்தை முழுமையாகப் பயன்படுத்தும் வகையில் உற்பத்தி செயன்முறை திட்டமிடப்பட வேண்டும்.
- தேவையான திறன்கள் இனங்காணப்பட வேண்டியதுடன் அவறியமான பயிற்சிகளும் அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

**இயந்திரம்**

**அவதானிப்பு**

நாங்கள் பின்வரும் சூத்திரத்தைப் பயன்படுத்துவதன் மூலம் தெரிவு செய்யப்பட்ட விடயங்கள் தொடர்பில் உண்மையான இயந்திர மணித்தியாலங்களை கணிப்பிட்டிருந்தோம்.

| | | | | |
|---|---|---|---|---|
| தெரிவுசெய்யப்பட்ட விடயங்களிற்கான உண்மையான இயந்திர மணித்தியாலம் | + | உரிய மாதத்திற்கான மொத்த உண்மையான இயந்திர மணித்தியாலம் அந்த மாதத்தில் பயன்படுத்திய மரத்தின் உண்மையான மொத்த அலகுகள் (கியூபிக் டெசிமேற்றர்கள்) | x | குறித்த விடயத்திற்கு ஈடுபடுத்தவேண்டிய மரத்தின் கியூபிக் டெசிமேற்றர்களின் எண்ணிக்கை |

| | **தளபாட விடயம்** | **அலகு ஒன்றிற்கான உண்மையான இயந்திர மணித்தியாலம் (வெட்டுதல் மற்றும் இயந்திரம் பிரிவுகள்)** | | |
|---|---|---|---|---|
| | | **2010 மே** | **2010 யூன்** | **2010 யூலை** |
| 1 | விரிவுரை மண்டப கதிரை | 2.09 | 1.01 | 0.49 |
| 2 | கைப்பிடிக் கதிரை | 1.83 | 0.88 | 0.43 |
| 3 | எழுதுனர் கதிரை | 7.99 | 3.85 | 1.89 |
| 4 | கனிஷ்ட நிறைவேற்றுனர் மேசை | 12.16 | 5.87 | 2.88 |
| 5 | ஒற்றை படுக்கை கட்டில் | 11.86 | 5.72 | 2.81 |
| 6 | சாதாரண கதிரை | 1.48 | 0.71 | 0.35 |

| | | | | |
|---|---|---|---|---|
| 7 | இரட்டை படுக்கை கட்டில் | 18.91 | 9.12 | 4.48 |
| 8 | சாதாரண மேசை | 10.05 | 4.85 | 2.38 |
| 9 | கருத்தரங்கு மண்டப கதிரை | 1.48 | 0.71 | 0.35 |
| 10 | சாப்பாட்டு மேசைக் கதிரை | 1.7 | 0.82 | 0.4 |

அலகு ஒன்றிற்கான உண்மையான இயந்திர மணித்தியாலம் 2010 மே முதல் 2010 யூலை வரை குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்திருந்தது. ஆனால், நாங்கள் உண்மையற்ற தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியாமையின் காரணமாக அலகு ஒன்றிற்கான ஊழிய மணித்தியாலத்தில் அத்தகைய அதிக வீழ்ச்சிக்கான எந்தவொரு காரணங்களையும் நாங்கள் இனங்காண முடியாதிருந்தது.

தேவைப்பட்ட நியம இயந்திர மணித்தியாலங்கள் தொடர்பான தகவல்கள் கிடைக்காமை காரணமாக அலகு ஒன்றிற்கான உண்மையான இயந்திர மணித்தியாலங்களை அலகு ஒன்றிற்கான நியம இயந்திர மணித்தியாலங்களுடன் ஒப்பிடுவதற்கு முடியாதுள்ளோம்.

**பொறியின் பயன்பாடு**

| **மாதம்** | **கிடைக்கக் கூடிய அதிகூடிய இயந்திர மணித்தியாலங்கள் (ஏ)** | **பயன்படுத்திய உண்மையான இயந்திர மணித்தியாலம் (பீ)** | **பயன்படுத்தப்படாத இயந்திர மணித்தியாலம் (ஏ-பீ)** |
|---|---|---|---|
| மே | 3,480 | 1,185 | 2,295 |
| யூன் | 4,060 | 1,089 | 2,971 |
| யூலை | 4,263 | 875 | 3,388 |

2010 யூலையில் உண்மையான இயந்திர மணித்தியாலங்களை 2010 யூன் மாதத்துடன் ஒப்பிடும்போது 20 சதவீதம் வீழ்ச்சியடைந்திருந்ததுடன் 2010 யூன் மாதத்தில் உண்மையான இயந்திர மணித்தியாலங்களை 2010 மே மாதத்துடன் ஒப்பிடும் போது 8 சதவீதம் வீழ்ச்சியடைந்திருந்தது. 2010 யூன் மாதத்துடன் ஒப்பிடும் போது 2010 யூலை மாதத்தில் மொத்த உற்பத்தி 64 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் 2010 யூன் மாதத்தில் மொத்த உற்பத்தி 2010 மே மாதத்துடன் ஒப்பிடும் போது 90 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

2010 இன் முதலாவது அரையாண்டின் போது 06 இயந்திரங்களின் பயன்பாடு ஒரு இயந்திரத்திற்கு 15 மணித்தியாலங்களை விடக் குறைவாக இருந்தது.

அதிகளவு இயந்திரங்கள் நல்ல வேலை செய்யும் நிலையில் உள்ள போதிலும் அவை அவற்றினுடைய உச்ச இயலளவு வரை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

பயன்படுத்தப்படாத இயந்திர மணித்தியாலங்களிற்கான காரணங்கள்

- உற்பத்தித் திட்டமிடல் இன்மை.
- தகுதியான இயந்திர இயக்குனர்கள் இன்மை.

**வலியுறுத்திக் கூறல்**

- பயன்படுத்தப்படாத இயந்திர மணித்தியாலங்கள் உற்பத்திக் கிரய அதிகரிக்கும் செயற்திறன் வீழ்ச்சிக்கும் வளப் பயன்பாட்டினைக் குறைப்பதற்கும் வழிவகுக்கும்.
- பயன்படுத்தப்படாமையால் இயந்திரங்கள் பழுதடைதல் (எந்த நலன்களையும் பெற்றுக்கொள்ளாமல் இயந்திரங்களின் பெறுமானத்தேய்வு).

**சிபார்சுகள்**

இயந்திரங்களை வினைத்திறனுடனும் ஆக்கபூர்வமாகவும் உச்ச அளவில் பயன்படுத்தப்டுவதற்காக முறையான உற்பத்தி திட்டமிடல் முறைமை அறிமுகப்படுத்த வேண்டும்.

**அரச மரக் கூட்டுத்தாபனத்தின் பதில்கள்**

- எந்தவொரு திணைக்களம்/ தாபனம் அல்லது கூட்டுத்தாபனத்தின் வேலைத்தளத்தில் பொருட் கழிவு, பயன்படுத்தப்படாத ஊழியம் மற்றும் பயன்படுத்தப்படாத இயந்திரம் என்பன தவிர்க்க முடியாதவையாகும். எவ்வாறெனினும் முகாமைத்துவம் பின்பற்றிய பல்வேறு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் காரணமாக அரச மரக் கூட்டுத்தாபனத்தில் இது குறைந்த அளவில் காணப்படுகின்றது.
- வளப் பயன்பாடு, உற்பத்தி மற்றும் நிதிசார் செயல்முன்னேற்றம் என்பவற்றை கண்காணிப்பதற்கு தகவல் முறைமை ஒன்றை அரச மரக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவம் அறிமுகப்படுத்தியது. அரச மரக் கூட்டுத்தாபனம் ஈஆர்பீ கணனி முறைமையினை தற்போது பரீட்சிக்கின்றது. இது வளப் பயன்பாடு, உற்பத்தி மற்றும் நேரிணைப்பு கட்டளை பெறல் என்பவற்றினை கண்காணிக்கும்.

- உற்பத்திப் பிரிவுகளிற்கு அறிமுகப்படுத்தப்பட்ட கிரயமிடல் முறைமையானது தொழிலாளர், மூலப் பொருட்கள், இயந்திரம் மேந்தலைகள் அத்துடன் நேர்க்கிரயம்

போன்ற வளப்பயன்பாட்டினை இனங்காணும் மேலும் உற்பத்தி செயன்முறைக்கான கிரயம் மற்றும் வளப் பயன்பாட்டை வினைத்திறனாக கண்காணிப்பதற்கு முகாமைத்துவத்திற்கு உதவுவதுடன் வினைத்திறன் மற்றும் இலாபத்தன்னைமை உயர்த்தலாம்.

- அரச மரக் கூட்டுத்தாபனமானது மரக் கழிவு சம்பந்தமாக அறிக்கையில் குறிப்பிடப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக பரீட்சித்து மாற்று நடவடிக்கைகள் எடுப்பதுடன் சிபார்சு செய்யப்பட்டவாறு 5 எஸ் முறைமை அறிமுகப்படுத்தும்.
- இயந்திரங்கள் தங்களது உச்ச அளவு இயலளவில் செயற்படாததன் காரணமாக இயந்திரங்களின் விளைவற்ற மணித்தியாலங்கள் என்ற உங்களின் வாதத்துடன் நாம் உடன்படவில்லை. கிடைக்கக் கூடிய வளங்களுக்கு உட்பட்டு இயந்திரங்கள் செயற்படுத்த தேவை ஏற்படும் போது.
- அனைத்து கட்டிடத் தொகுதியின் அமைவிடம் பௌதீக மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளைக் கருத்திற்கொண்டு தற்போதிருக்கும் முறைமையின் பிரகாரம் கல்டிமுல்ல கட்டிடத் தொகுதியின் வசதிகளை இடமாற்றுவதற்கு அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் ஏற்கனவே நடவடிக்கை எடுத்திருந்தது.

# பகுதி III

## 3.11 கொள்வனவு நடைமுறை மீதான வழிகாட்டல்களுடன் இணங்குதலை மதிப்பிடல்

**அவதானிப்பு**

கேளவ்ளம்பி ஆனது கொள்வனவு வழிகாட்டல்கள் மற்றும் அரசாங்க கொள்வனவு கைநூல்களுடன் இணங்கிநடக்க வேண்டும். கொள்வனவு நடைமுறைகள் தொடர்பில் பின்வரும் குறைபாடுகளை நாங்கள் அவதானித்தோம்.

- மெருகுபடுத்தல் பொருட்களின் விடயத்தில் கொள்வனவுக் கையேட்டில் குறிப்பிடப்பட்டவாறு கேள்விகள் கோரப்பட்டிருக்கவில்லை. கேளவ்ளம்பி ஆனது 3 கேள்விகளை அடிப்படையில் 2008 யூலை 21 இல் உதவிப் பொது முகாமையாளரால் வழங்கப்பட்ட அங்கீகாரத்தின் பேரில் (கல்டிமுல்ல) மெருகுபடுத்தல் பொருட்களை 2010 மார்ச் வரை தொடர்ச்சியாக கொள்வனவு செய்து வந்தது.
- கேளவ்ளம்பி இன் வர்ணம் தீட்டுவோருடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடலில் வழங்கப்பட்ட பொருட்கள் நியம தரத்தை உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை என வெளிப்பட்டது.
  2010 மார்ச் நடுப்பகுதிக்கு பின்னர், மெருகுபடுத்தல் பொருட்களின் கொள்வனவு கேளவ்ளம்பி சார்பில் தலைமை அலுவலகத்தல் கையேற்கப்பட்டிருந்தது.
- இரும்புப் பொருட்கள் தொடர்பில், 5 திறந்த கேள்விகள் கேளவ்ளம்பி சுற்றுவட்டத்தில் செயற்படுகின்ற வழங்குநர்களிடமிருந்து கோரப்பட்டிருந்தது. அதிகமான சந்தர்ப்பங்களில், கேள்விகள் தொழிற்சாலை ஊழியர்கள் மூலம் முறையற்ற விதத்தில் வழங்குனர்களிடமிருந்து பெறப்பட்டிருந்தது. இந்த நடைமுறை கணக்காய்வு திகதி வரையும் தொடர்ந்திருந்தது.
- அனுமதிக்கப்பட்ட ரூபா 25,000 எல்லையினை விஞ்சுவதைத் தவிர்ப்பதற்காக மொத்தப் பெறுமதியை கூறுபடுத்தி கொள்வனவு செய்யப்பட்டிருந்த சந்தர்ப்பங்களை நாங்கள் அவதானித்தோம்.
- 2010 ஆம் ஆணடின் போது தலைமை அலுவலகம் ஊடாக செய்யப்பட்ட கொள்வனவு தொடர்பில், ஆகக்குறைந்த கேள்வி தவிர ஏனையவற்றை தெரிவு செய்தமை காரணமாக இல.ரூபா 324,000 மேலதிக கொடுப்பனவாக செலுத்தப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது. 2010 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்வதற்கு முன்னர் மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டிருக்கவில்லை என்பது மேலும் அவதானிக்கப்பட்டது.

**வலியுறுத்திக் கூறல்**

- குறித்த கொள்வனவு நடைமுறைகளுடன் இணங்காமை கேஎவ்எம்பி இன் சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்களிற்கு வழிவகுக்கும்.
- பூர்த்தி செய்த உற்பத்திப் பொருட்களில் நியம தரத்தை பேணுவதற்கு தவறியமை.
- உயர்தரமாக உற்பத்திப் பொருட்களை குறைந்த விலைகளில் கொள்வனவு செய்ய முடியுமாக இருந்த வேளை வழங்குநர்களிற்கு மிகைக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டன.
- நியமத்துடன் இணங்காத பொருட்களைக் கொள்வனவு செய்வதன் மூலம் தொழிலாளர்களின் சுகாதார நிலைமைகள் பாதிக்கப்படலாம்.

**சிபார்சுகள்**

- முகாமைத்துவம் கொள்வனவு வழிகாட்டல்கள் மற்றும் கொள்வனவுக் கையேடுகளுடன் கண்டிப்பாக இணங்கி நடத்தல்.
- கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களின் தரத்தை பரிசோதிப்பதற்கு ஒழுங்குகள் செய்ய வேண்டும்.

**அரச மரக் கூட்டுத்தாபனத்தின் பதில்கள்**

அரச மரக் கூட்டுத்தாபன முகாமையானது பொருட்கள் மற்றும் சேவைகளை கொள்வனவு செய்யும் போது கொள்வனவு வழிகாட்டலுடன் கடுமையாக இணங்குவதற்கும் அதனை பின்பற்றுவதற்கும் அறிவுறுத்தல்கள் வழங்குகின்றது. முகாமைத்துவம் பிரிவு 3.11 இல் அறிகையிடப்பட்ட அவதானிப்புகளை கவனத்திற்கு எடுப்பதுடன் பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்படும்.

## 3.12. ஆட்சேர்ப்புக் கொள்கையின்மை

**அவதனிப்புகள்**

அரச மரக் கூட்டுத்தாபனத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு கொள்கை எதுவும் இருக்கவில்லை என்பதனை நாங்கள் அவதானித்தோம். அத்தகைய கொள்கை இன்மையால் கேஎவ்எம்பி இன் தொழிலாளர் தேவைகளை கருத்திற்கொள்ளாமல் மிதமிஞ்சிய திறனற்ற தொழிலாளரை சேர்க்க வேண்டியேற்பட்டிருந்தது. இதன்விளைவாக நாங்கள் பின்வருவனவற்றை மேலும் கவனித்தோம்.

- தச்சுத்தொழிலாளியாக வாடகைக்கமர்த்தப்பட்ட சில ஊழியர்கள் உதவி இயந்திர இயக்குனர்கள் மற்றும் மரத் தெரிவாளர்கள் போன்ற ஏனைய செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்பட்டனர்.
- ஏறத்தாழ 16 தச்சுத்தொழிலாளிகள் வேலைக்கமர்த்தப்பட்ட போதிலும் 4 பேர் மாத்திரமே தச்சுத்தொழிலில் ஈடுபட்டனர்.
- தொழிற்சாலை முகாமையாளர் நியமிக்கப்பட்டிருக்காததுடன் தொழிற்சாலை முகாமையாளரின் கடமைகள் தொழிற்சாலையொன்றை முகாமை செய்வதற்குரிய நுன் அறிவினைக் கொண்டிருக்காத கிரயமிடல் உத்தியோகத்தருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது.
- தொழிற்சாலையில் தர உத்தியோகத்தர் வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கவில்லை. ஆகவே, தரக்கட்டுப்பாட்டு செயன்முறையல்லாமல் கேளவ்ளம்பி இல் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.
- அதிகளவு தொழிலாளர்களிற்கு போதிய பயிற்சி வழங்கப்பட்டிருக்கவில்லை. பதினெட்டு தொழிலாளர்கள் மூன்று மாதங்களாக பயிற்றப்பட்டிருந்ததுடன் நான்கு தொழிலாளர்கள் மூன்று நாட்கள் பயிற்சியளிக்கப்பட்டனர். மேலும், சில தொழிலாளிகள் முறையான பயிற்சி வழங்கப்பட்டிருக்காத வேலைகள் ஒப்படைக்கப்பட்டிருந்தன.

**வலியுறுத்திக் கூறல்**

- வேலைக்கேற்ற ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் விளைவாக (கொள்கை இன்மை காரணமாக), நுட்பமற்ற ஊழியர்கள் முகாமைத்துவத்தால் சேர்க்கப்பட்டிருந்தனர். பயிற்சி, அபிவிருத்தி, கட்டமைப்பு மற்றும் பயிற்சி தேவைப்பட்ட பகுப்பாய்வு நடைமுறைகள் என்பன இன்மையும் தொழிற்சாலையின் செயற்திறனின்மைக்கு பங்களித்திருந்தது. இது சகல பிரிவுகளிலும் (வினைத்திறனில் குறைவு மற்றும் தரம் குறைந்த உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்தல்) செயற்திறனின்மையை விளைவித்தது.
- தர உத்தரவாத உத்தியோகத்தர் மற்றும் தரக்கட்டுப்பாட்டு செயன்முறைகள் இல்லாமையானது தரமற்ற தளபாட உற்பத்திக்கு வழிவகுத்தது.
  2010 ஆகஸ்ட் 12 இல் பொலிஸ் தலைமை அலுவலகத்திற்கு விற்கப்பட்ட ஐம்பது சாப்பாட்டு மேசைக் கதிரைகள் தரம் குறைந்த உற்பத்தி காரணமாக 2010 ஆகஸ்ட் 13 இல் திருப்பி அனுப்பப்பட்டிருந்தமை உதாரணமாக குறிப்பிட முடியும்.

**சிபார்சுகள்**

- ஆட்சேர்ப்புக் கொள்கை, அங்கீகரித்த பதவியணி மற்றும் ஆட்சேர்ப்புத் திட்டம் என்பவற்றினை அறிமுகப்படுத்தலில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.
- தொழிற்சாலை பதவியணி வழமையான அடிப்படையில் மீளாய்வு செய்யப்பட வேண்டியதுடன் ஆட்சேர்ப்பானது அங்கீகரித்த பதவியணியுடன் ஒத்திருக்க வேண்டும்.
- தேவைப்பட்ட பயிற்சியை ஒழுங்குமுறையான அடிப்படையில் மதிப்பிடவேண்டியதுடன் சகல தொழிலாளருக்கு வேலை செய்யும் போதே பயிற்சி மற்றும் வகுப்பறைப் பயிற்சியை தேவையான வேளையில் வழங்க வெண்டும்.
- தர உத்தரவாதச் செயற்பாடானது தளபாடம் உற்பத்தி செய்தல் தொடர்பில் தர உத்தரவாதத்தில் அனுபவமுள்ள தகைமையுடைய உத்தரவாத உத்தியோகத்தரை வேலைக்கமர்த்துவதன் மூலம் உருவாக்கப்படவேண்டும்.

## 3.13. காணி மற்றும் கட்டிடங்களின் உரிமையாண்மையும் பயன்பாடும்

**அவதானிப்பு**

கல்டிமுல்லாவிலுள்ள காணி மற்றும் கட்டிடங்களின் உரிமையாண்மை 1969 நவம்பர் 7 ஆந் திகதிய 14879 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் அரச மரக் கூட்டுத்தாபனத்திற்கு ஒப்படைக்கப்பட்டது. எவ்வாறாயினும், கல்டிமுல்லாவிலுள்ள காணி மற்றும் கட்டிடம் வரலாற்று கிரய அடிப்படையில் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் அவை அரச மரக் கூட்டுத்தாபனத்தின் கணக்குப் புத்தகங்களில் மீள்மதிப்பிடப்பட்டோ அல்லது சந்தைப் பெறுமதியில் வெளிப்படுத்தப்பட்டோ இருக்கவில்லை.

காணியின் மொத்தப் பரப்பு 3.26 ஹெட்டெயர்கள் ஆகும். இதில் பெரும்பகுதி வினைத்திறனாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. போதிய இடவசதி உள்ள போதிலும் முகாமைத்துவமானது பதப்படுத்திய மரங்களை களஞ்சியப்படுத்துவதற்கு ஒரு கூடாரம் கட்டுவதற்கு எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. பதப்படுத்திய மரங்கள் பதப்படுத்தல் பொறழகடகு வெளியே எவ்வித அமைவிடமுமின்றி களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. (பதப்படுத்திய மரங்கள் மழை வெயில் படும்படியாக வைக்கப்பட்டிருந்தது. ஆகவே மரத்தின் தரம் வீழ்ச்சியடைந்தது)

பதப்படுத்திய மரங்கள் மழை வெயில் படும்படியாக குவிக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்களை பின்வரும் படம் காட்டுகிறது.

பூர்த்தி செய்யப்பட்ட தளபாட உற்பத்திப் பொருட்களானது பூர்த்தியாக்கப்பட்ட உற்பத்திப் பொருட்களை களஞ்சியப்படுத்துவதற்கு பொருத்தமில்லாத பகுதிகளில் கயஞ்சியப்படுத்தப்பட்டிருந்ததென நாங்கள் மேலும் அவதானித்தோம். (பூர்த்தியாக்கப்பட்ட உற்பத்திப் பொருட்கள் களஞ்சியப்படுத்தப்பட்ட இடங்களில் தூசு மற்றும் குப்பைகள் பொதுவாக தெரிகின்றன) பூர்த்தியாக்கப்பட்ட உற்பத்திப் பொருட்கள் விற்பனை செய்யப்படும் போது அதிக சந்தர்ப்பங்களில் திரும்ப மெருகூட்டப்பட வேண்டியிருந்ததென தொழிற்சாலை தொழிலாளர்களுனான கலந்துரையாடலில் வெளிப்பட்டது.

**வலியுறுத்திக் கூறல்**

- அரச மரக் கூட்டுத்தாபனத்தின் கணக்குப் புத்தகங்களில் கேஎவ்எம்பி இன் காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.
- களஞ்சியப்படுத்துவதற்கு பொருத்தமில்லாத பகுதியில் வெட்டிய மரங்கள் மற்றும் பூர்த்தியாக்கிய உற்பத்திப் பொருட்களை களஞ்சியப்படுத்தல் தர வீழ்ச்சி மற்றும் நிதி நட்டங்களிற்கு வழிவகுக்கும். (கேஎவ்எம்பி இற்கு பாதகமான விலைகளில் ஏலத்திற்கு விடப்பட்டன).
- காணி மற்றும் கட்டிடங்களின் ஆக்கபூர்வமற்ற பயன்பாடான இலாபத்தன்மையான முயற்சிகளிற்கு காணியை பயன்படுத்தும் சந்தர்ப்பத்திலிருந்து கேஎவ்எம்பி ஐ கொண்டுவர முடியும். (உற்பத்தி செய்கின்ற பொறியில் விஸ்தரிப்பு, வெளி வாடிக்கையாளர்களிற்கு வெட்டிய மரங்களை விற்பதற்கான புதிய முயற்சிகள்)

**சிபார்சுகள்**

- காணி கட்டிடங்களை அளவை செய்வதற்கும் மீள்பெறுமதியிடுவதற்கு உடனடி நடவடிக்கை எடுத்தலும் தற்போதைய சந்தைப் பெறுமதியை வெளிப்படுத்துவதற்கு கணக்குப் புத்தகங்களை சீராக்கல்.
- தேவையான களஞ்சிய வசதிகளை மதிப்பிடல் மற்றும் மேலதிக களஞ்சிய வசதிகளை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

- கேளவ்எம்பி இற்கு மாற்று வருமான மூலங்களை உருவாக்குவதற்கு கிடைக்கக் கூடிய காணி மற்றும் கட்டிடங்களை மாற்றுவழிகளில் பயன்படுத்தலினை மதிப்பிடல்

**அரச மரக் கூட்டுத்தாபனத்தின் பதில்**

புதிய காட்சியறைகளை நிர்மாணித்தல் காணி கட்டிடங்களின் செயற்திறனற்ற பயன்பாடு என்பன சிக்கலான பகுதிகலிலுள்ள வசதிகளை உடனடியாக மீளமைத்தலின் கீழ் திருத்தப்படும்.

## 3.14. பொது முயற்சிகள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட நல்ல ஆளுகை நடைமுறை வழிகாட்டல்களுடன் இணங்காமை

**அவதானிப்புக்கள்**

| 2003 யூன் 2 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயறசிகள் சுற்றறிக்கைகான தொடர்பு | அவதானிப்பு |
|---|---|
| பிரிவு 3.2<br><br>சபையின் சேர்மானம் | பணிப்பாளர் சபையானது தலைவர், தொழிற்பாட்டு பணிப்பாளர், வனவள கட்டுப்பாட்டாளர் நாயகம், திறைசேரி பிரதிநிதி மற்றும் ஏனைய மூன்று சபை உறுப்பினர்கள் என்போரை உள்ளடக்கிய 07 அங்கத்தவர்களை கொண்டுள்ளது. |
| பிரிவு 3.6 (ஏ)<br><br>சபையின் கொள்கைகளானது வடிவமைக்கப்பட்ட அதே உத்வேகத்துடன் நிறுவனம் மற்றும் பரந்துபட்ட பொதுமக்களின் சிறந்த அக்கறையுடனும் நிறைவேற்றப்படுகின்றதா என்பதனை உறுதிப்படுத்தல். | கேளவ்எம்பி இல் அமுலிலுள்ள நடைமுறைகள் மற்றும் வழிகாட்டல்களுடன் திருப்திகரமாக இணங்கி நடப்பதனை உறுதிப்படுத்தும் வகையில் அமுல்ப்படுத்தப்பட்ட உள்ளபடியான நடைமுறைகளுக்கு எதிராக வழிகாட்டல்களின் வேண்டுதல்களை பணிப்பாளர்களை சபை மீளாய்வு செய்துள்ளது என்பதற்கான சான்றுகள் காணப்படவில்லை. |

பிரிவு (பீ)

முகாமைத்துவ தகவல் அறிக்கைகள் மூலம் முகாமைத்துவ நடவடிக்கைகளைக் கண்காணித்தல். இயங்கிக்கொண்டிருக்கும் தொழில் முயற்சிகள் அதன் செயற்பாடுகளை உறுதிப்படுத்துவதற்கு செலாற்றலை மதிப்பாய்வு செய்தல்.

பிரிவு (சீ)

பெறுபேறுகளை விரும்பிய எதிர்பார்ப்புக் களை ஒத்திருக்கவில்லையாயின் அவைகள் அடைந்து கொள்ளப்படுகின்றதா என்பதனை உறுதிப்படுத்துவதற்கு தாமதமாகின்ற பரிகார நடவடிக்கைகள் எடுத்தல்.

பிரிவு 4.2.2

உள்ளபடியான செயலாற்றல் திட்டத்துடன் ஒத்துள்ளது என்பதனை உறுதிப் படுத்தவதற்காக சபையானது அதன் கூட்டிணைந்த திட்டம், பாதீடு செயலாற்றல் என்பவற்றினை காலரீதியாக மீளாய்வு செய்ய வேண்டியதுடன் பரந்தளவு முரண்பாடு காணப்படுகின்றது என அவதானிக்கப் பட்டதால் மற்றும் தேவைப்படும் வேளையில் திட்டம்/ பாதீடு திருத்தப்படடால் உரிய வேளையில் பரிகார நடவடிக்கை எடுத்தல்.

2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளின் போது மாதந்த கூட்டங்கள் ஒழுங்குமுறையான நடாத்தப்பட்டிருக்கவில்லை. ஆகவே சபையானது முரண்பாடுகளைத் தவிர்ப்பதற்கு உரிய நேரத்தில் சீர்செய்யும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

மேலும் கேஎவ்எம்பி ஆனது வருடாந்த பாதீட்டினைத் தயாரித்திருக்கவில்லை மற்றும் பாதீட்டுக்கு எதிராக அதன் செயலாற்றல் ஒழுங்காக அளவீடு செய்யப்பட்டிருக்கவில்லை என நாங்கள் அவதானித்தோம்.

முன்னைய ஆண்டுகளில் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களானது கூட்டுத்தாபனத்தினால் பெணப்பட்ட அனைத்துக் காட்சியறைகளின் ஒட்டுமொத்த எதிர்மறை நிலைமையினை வெளிப்படுத்தியது.

எவ்வாறாயினும், எங்களுடைய வேண்டுகளின் பேரில் தொழிற்சாலை முகாமைத்துவம் கல்டிமுல்ல கட்டிடத்தொகுதியின் நிதிச் செயலாற்றலை வேறாக்குவதற்காக பின்வரும் நிதித் தகவல்கள் தயாரித்துள்ளது.

சிரேஷ்ட முகாமையாளர்கள் அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்ட பணிப்பாளர்களிற்கு பொறுப்பானவர்கள் என்பதனை நிலை நிறுத்துவதற்கும் வெளிப்படைத்த தன்மை அடைந்து கொள்ளப்பட்டது என்பதனை உறுதிப்படுத்துவதற்கும் குறித்த சில இடைவெளியில் கண்காணிப்பு செய்யவேண்டுமென்பது முக்கியமாகும்.

| **ஆண்டு** | **நட்டம்** | **விற்பனை** | **உற்பத்தி** | **நிர்வாகம்** |
|---|---|---|---|---|
| | **இ.ரூபா மில்** | **இ.ரூபா மில்** | **இ.ரூபா மில்** | **இ.ரூபா மில்** |
| 2007 | 21 | 22.8 | 23.8 | 20.00 |
| 2008 | 11 | 22.9 | 8.6 | 25.30 |
| 2009 | 29 | 21.7 | 25.3 | 25.40 |

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது போதக்குறைவான விற்பனைப் அளவுகள் போதாமை, உற்பத்திக் கிரயம் அதிகரித்தல் மற்றும் நிர்வாகக் கிரயம் அதிகரித்தல் என்பன காரணமாக அலகிற்கு குறிப்பிடத்தக்க அளவான நட்டம் ஏற்பட்டிருந்தது.

பிரிவு 5.1.2

திட்டமிட்ட காலத்தின் போது எய்தப்பட வேண்டிய நோக்கங்கள் மற்றும் இலக்குகள் என்பவற்றுடன் முகாமையாளர்களின் பொறுப்புக்களை செயற்பாட்டுத்திட்டம் தெளிவாக இனங்காணல்

கூட்டிணைந்த திட்டம் இருந்த போதிலும் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட சில பிரதான பிரேரணைகள் கீழே காட்டப்பட்டவாறு முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை என்று நாங்கள் அவதானித்தோம்.

- தளபாடம் மற்றும் ஏனைய மரத்தை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திப் பொருட்களின் உற்பத்தி மற்றும் போட்டிகளை அதிகரிப்பதற்கு.

- செயற்திட்ட பிரேரணைகள் தயாரித்தல், தொழிற்சலைக் கட்டிடங்களின் திருத்தங்கள் மற்றும் விரிவாக்கல், மின்னிணைப்பு மற்றும்

கொள்வனவு, இயந்திரங்கள் பொருத்துதல், நுட்ப மற்றும் நுட்பமற்ற ஊழியர்களைப் பயிற்றுதல், உத்தரவாத உத்தியோகத்தர் மற்றும் 2 உத்தரவாத உதவியாளர்கள் மற்றும் ஒரு உற்பத்தி முகாமையாளரைச் சேர்த்தல் என்பவற்றிற்கு ஒரு குழுவினை நியமித்தல்.

- தளபாட காட்சியறைகளின் செயற்திறனான செயற்பாட்டினை மேம்படுத்தல்.

- மொரட்டுவையில் காட்சியறைகளை நிர்மாணிப்பதற்கு விதந்துரைக்கப் படுகின்றது.
- சாத்தியவள ஆய்வினை மேற்கொள்வதற்கு

- அடுத்த 5 ஆண்டுகளில் தளபாட சங்கங்கள் மற்றும் 10 தனியார் உற்பத்தியாளர்களுடனான தந்திரோபாய பங்குடமையினை மேம்படுத்தல்.

தளபாட உற்பத்தி மற்றும் மர விற்பனைகள் தொடர்பான குறிக்கோள்களை மாத்திரமே சுட்டிக்காட்டி 2008, 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளிற்காக வருடாந்த செயற்பாட்டுத் திட்டம் குறிப்பிட்டு தயாரிக்கப்பட்டிருந்த அதேநேரம் கூட்டிணைந்த திட்டத்தில் குறிப்பிடப்பட்ட தளபாட உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் போன்றவாறான ஏனைய குறிக்கோள்களிற்கு அவதானம் செலுத்தியிருக்கவில்லை.

**வலியுறுத்திக் கூறல்**

- பொது முயற்சிகள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட சுற்றறிக்கைகள் மற்றும் ஏனைய ஆளுகைத் வேண்டுதல்களுடன் இணங்காமை.
- கூட்டிணைந்த திட்டத்தை பின்பற்றுவதற்குத் தவறியமை காரணமாக கேளவ்ளம்பி குறிக்கோள்கள் மற்றும் குறிக்கோள்களை எய்துவதற்கு தவறியிருந்தது.
- 2008 - 2012 வரையான காலத்திற்காக தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தில் இலக்குகள் இன்மை சுட்டிக்காட்டப்பட்டிருக்காமையால் செயற்பாட்டுத் திட்டம் இன்மையாலும் உண்மையான செயலாற்றலை மதிப்பாய்வு செய்வது சாத்தியமற்றிருந்தது.

**சிபார்சுகள்**

பணிப்பாளர் சபையானது 2003 யூன் 2 ஆந்திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட கூட்டிணைந்த ஆளுகை வழிகாட்டல்களுடன் இணங்குவதற்கு உரிய வேளையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**அரச மரக் கூட்டுத்தாபனத்தின் பதில்கள்**

# பகுதி IV

## 3.15 சுற்றாடல் தாக்கம்

**அவதானிப்புகள்**

- 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட 2008 சனவரி 25 ஆந் திகதிய 1533/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் பகுதி சீ இன் பிரிவு 18 இன்படி, ஒரு நாளிற்கு 50 கனவளவை விடக் குறையாமல் மரம் அரியும் இயலளவை வைத்திருக்கின்ற மரம் அரியும் ஆலையின் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு உத்தரவுப் பத்திரம் வேண்டப்பட்டுள்ளது.
  எவ்வாறாயினும், அரச மரக் கூட்டுத்தாபனமானது அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தலில் வேண்டப்பட்டவாறு கல்டிமுல்ல மரம் வெட்டும் ஆலைக்கு இந்த உத்தரவுப் பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை என நாங்கள் அவதானித்தோம்.

- 1988 இன் 56 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் (திருத்திய) அதிகாரச்சட்டம் மற்றும் 2000 இன் 53 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் (சுற்றாடல் பாதுகாப்பு) பிரிவு 23, பகுதி IV ஆ இற்கமை, சுற்றுப்புறத்தில் கழிவினை வெளியேற்றுதல், அகற்றுதல் அல்லது குவித்தல் என்பன தடை செய்யப்பட்டது. மேலும் 2008 சனவரி 25 ஆந் திகதிய 1533/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தலின் பகுதி ஏ இன் பிரிவு 64 இன்படி, இரசாயண பதப்படுத்தலில் ஏடுபட்டுள்ள கைத்தொழில்கள் மற்றும் செப்பு பதப்படுத்தல் தவிர்ந்த மரப் பாதுகாப்பு என்பதற்காக உத்தரவுப் பத்திரத்தை வேண்டப்படுகின்றது.
  2010 செப்தம்பர் 03 ஆந் திகதிய மத்திய சுற்றாடல் அதிகாரசபையால் வழங்கப்பட்ட கடிதத்தின்படி, கேஎவ்எம்பி இன் முகாமையாளர் 2010 செப்தெம்பர் 13 இல் மேல மாகாணம்- மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்க உத்தரவுப் பத்திரத்தை புதுப்பிப்பதற்காக விண்ணப்பத்தை சமர்ப்பித்திருந்தது. கேஎவ்எம்பி ஆனது கணக்காய்வு வெளிக்கள வேலைகளை பூர்த்தி செய்யும் 2010 செப்தம்பர் 30 ஆந் திகதியில் அனுமதிப்பத்திரம் புதுப்பித்தல் தொடர்பில் மத்திய சுற்றாடல் அதிகார சபையிடமிருந்து எந்தவொரு பதிலும் பெறப்பட்டிருக்கவில்லை. உத்தரவுப்பத்திரம் புதுப்பிப்பதற்கான விண்ணப்பம் காலாவதியாகும் திகதிக்கு 3 மாதங்களிற்கு முன்னர்

மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும் கேளவ்ளம்பி ஆனது அத்தேவைப்பாடுகளுடன் இணங்கியிருக்கவில்லை.

- 2008 சனவரி 25 ஆந் திகதிய 1533/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தலின் பகுதி ஆ இலுள்ள பிரமாணங்களின் பிரிவு 64, இன்படி, 2010 ஆகஸ்ட் 18 முதல் 2011 ஆகஸ்ட் 17 வரையான காலத்திற்காக பெறப்பட்ட அனுமதிப்பத்திரத்தில், பின்வரும் மேலதிக நியதிகள் மற்றும் நிபந்தனைகள் குறிப்பிடப்பட்டிருந்தன.

    - கிறீஸ் /சூழை எண்ணெய் என்பன ஏதாவது வடிந்தோடுவதை அல்லது கசிவினை நிறுத்தும் நோக்கில் மரப் பதப்படுத்தல் பகுதியிலிருந்து வெள்ள நீர் வடிகாலமைப்பு வேறாக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், கிறீஸ் /சூழை எண்ணெய் களஞ்சியப்படுத்தப்பட்டதுடன் அசட்டையாக வளவில் பயன்படுத்தப்பட்டது. கீழே புகைப்படத்தில் குறிப்பிடப்பட்டவாறு கிறிஸ் பீப்பாய்கள் வெயில் மழை படும்படி திறந்த வெளியில் களஞ்சியப்படுத்தப்பட்டது.



    இவை ஆபத்தான இரசாயண பொருட்களாக இருப்பதனால் ஏதாவது விபத்துக்கள் மற்றும் ஒழுக்குகளால் மண் மாசுபடுத்தல் நிகழ்தலினால் தவிர்ப்பதற்கு கிறீஸ் பீப்பாய்களை களஞ்சியப்படுத்துவதில் முறையான முன்னெச்சரிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

    - நிலத்தின் மேற்பரப்பு அல்லது நிலத்தடி நீர் மாசடைவதனை தவிர்க்கும் வகையில் மரப் பதப்படுத்தல் பகுதியின் தளங்கள் மற்றும் வெட்டிய மரத்தை களஞ்சியப்படுத்தும் பகுதி ஏதாவது ஒழுக்குகள் அல்லது எதிர்பாராத நிகழ்வுகளை சேகரிப்பதற்காக ஏற்பாட்டுடன் நன்றாக சீமெந்திடவேண்டும்.

மரப் பதப்படுத்தல் பகுதியிலிருந்து கிறீஸ் கசிவு மற்றும் வெளிப்பாய்ந்து பரவி சுற்றுப்புறத்திலுள்ள நிலப்பகுதியினை மாசுபடுத்தியதனால் கேளவ்ளம்பி ஆல் இத்தேவைப்பாடு இணங்கி நடக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. மண் மற்றும் நிலத்தடி நீரிற்குள் கிறீஸ் நேரடியான ஊடுருவியதுடன் கீழே

புகைப்படத்தில் குறிப்பிடப்பட்டவாறு வெள்ள நீர் வழிந்தோடியிருந்தமை வெளிப்படையாகும்.



- 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டத்தின் 23 பீ ஆம் பிரிவின்படி 2010 ஆகஸ்ட் 30 இல் பெறப்பட்ட சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தின்படி, பின்வரும் மேலதிக நியதிகள் மற்றும் நிபந்தனைகளுடன் இணங்கி நடக்க வேண்டியிருந்தது.

  - வேலைத்தளத்திலிருந்து அகற்றப்படும் வரை வெட்டுத்தூள்கள் தற்காலிக கூடாரங்களில் களஞ்சியப்படுத்தப்பட வேண்டும்.
  - தொழிற்சாலையின் தொழிலாளிகளின் சுகாதாரம் தொடர்பில் தொழிற்சாலைக் கட்டளைச் சட்டம் மற்றும் அதன் திருத்தங்களில் குறிப்பிடப்பட்ட விதிகள் மற்றும் பிரமாணங்களை பின்பற்றுவதது அவசியமானதாக உள்ளது.
  - 1942 இன் 45 ஆம் இலக்க தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் 12(1) ஆம் பிரிவின்படி, ஒவ்வொரு வேலைசெய்யும் அறையிலும் நடைமுறைக்கு ஏற்றவாறு போதிய காற்றோட்ட வசதியுடன் புதிய காற்று சுழற்சிக்காக ஆக்கபூர்வமான மற்றும் பொருத்தமான ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.
  - தொழிற்சாலை மற்றும் மரம் அரியும் ஆலையின் செயற்பாட்டிற்காக தெஹிவளை – கல்கிசை மாநகர சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

- தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டத்தால் வேண்டப்பட்டவாறு முறயான நிலைமையின் கீழ் வெட்டுத்தூள்களை அகற்றாமல் திறந்த வெளியில் அவை விடப்பட்டிருந்தது.
- கேஎவ்எம்பி இன் தொழிலாளர்கள் வேலையில் ஈடுபட்டிருக்கும் போது தூசுக் கவசம் மற்றும் பாதுகாப்பான தலைக் கவசங்கள் போன்ற போதிய பாதுகாப்பான அணிகலன்களை அணிந்திருக்கவில்லை என நாங்கள் அவதானித்தோம்.

பாதுகாப்பு அணிகலன்களை அணியாமல் தொழிலாளர்கள் இயந்திரங்களை செயற்படுத்தும் சந்தர்ப்பங்களை கீழேயுள்ள புகைப்படத்தில் காணலாம்



**வலியுறுத்திக் கூறல்**

- ஆபத்தான இரசாயண பொருட்கள் களஞ்சியப்படுத்தல் (கிறீஸ்/ சூழை எண்ணெய்), வெட்டுத்தூள்களை அகற்றுதல் மற்றும் கையாளலில் சுற்றாடல் பிரமாணங்கள், சிறந்த கைத்தொழில் நடைமுறைகள், சுகாதார மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் என்பவற்றுடன் இணங்கி நடக்கத்த தவறியமை மற்றும் தொழிற்சாலை கட்டளைச் சட்டத்தின் வேண்டுகையின்படி தொழிற்சாலை நடவடிக்கைகள் நடாத்தப்பட்டிருக்காமையால் கேளவ்ளம்பி மற்றும் அரச மரக் கூட்டுத்தாபனமானது சாத்தியமான சட்ட சிக்கல்களிற்கு உள்ளாகலாம்.

**சிபார்சுகள்**

- நிலத்தின் மேற்பரப்பு அல்லது நிலத்தடி நீர் மாசடைவதனை தவரிர்க்கும் வகையில் மரப் பதப்படுத்தல் பகுதியின் தளங்கள் மற்றும் வெட்டிய மரத்தை களஞ்சியப்படுத்தும் பகுதி ஏதாவது ஒழுக்குகள் அல்லது எதிர்பாராத நிகழ்வுகளை சேகரிப்பதற்காக ஏற்பாட்டுடன் நன்றாக சீமெந்திடவேண்டும்.
- பிரமாணங்களின்படி கழிவுப் பொருட்களை (வெட்டுத்தூள்) அகற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுத்தல்.
- தொழிற்சாலைக்குள் போதிய காற்றோட்டம் மற்றும் வெளிச்சம் வழங்குவதற்கும் தொழிலாளருக்கு பாதுகாப்பான அணிகலன்கள் வழங்குவதற்கும் ஒழுங்கு செய்தல்.
- தொழிற்சாலை மற்றும் மரம் வெட்டும் ஆலையை செயற்படுத்துவதற்கு தெஹிவளை – கல்கிசை மாநகர சபையிடம் அனுமதி பெறல்.

- பயன்படுத்தமுடியாத இயந்திரங்கள், பகுதிகள், மற்றும் பகுதியளவில் பொருத்திப்பட்ட வழக்கொழிந்த தளபாடங்களை தொழிற்சாலை வளவிலிருந்து அகற்ற வெண்டியதுடன் 5 எஸ் கொள்கையை அறிமுகப்படுத்த வெண்டும்.
- தூசுகளை சுற்றாடலுக்கு வெளியிடுதல் அல்லது சுற்றாடலுக்கு கவனமாக வெளியிடாது மரத்தூள்களை விற்றல் என்பவற்றினைத் தடுப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல்.

**அரச மரக் கூட்டுத்தாபனத்தின் பதில்கள்**

# பகுதி - V

## பொதுவான அவதானிப்புகள்

### 3.16. தொழிற்சாலை, மரம்வெட்டும் ஆலை மற்றும் வெட்டும் பொறி போன்ற வேறுபட்ட பிரிவுகளுக்கு மத்தியில் ஒருங்கிணைப்பு மற்றும் திட்டமிடல் இன்மை

**அவதானிப்புகள்**

மரம் அரியும் ஆலை, தொழிற்சாலை, பதப்படுத்தும் பொறி என்பவற்றிற்கு இடையிலான ஒருங்கிணைப்பு, தொடர்பாடல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

- தொழிற்சாலையானது அதன் உற்பத்தித் தேவைகள் மற்றும் மாதிரிகளின் அடிப்படையிலில் மரம் அரியும் ஆலையிலிருந்து மரத்தினை வெட்டிக்கொள்கின்றது. இப்படியிருக்கையில், பதப்படுத்தும் ஆலையில் பதப்படுத்திய அரிந்த மரங்கள் பெற்றுக்கொள்ளக் கூடியதனை தொழிற்சாலை பரிசோதித்திருக்கவில்லை. பதப்படுத்தும் பொறியில் அதேயளவான பதப்படுத்திய மரங்கள் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருத்தல் மேலதிக மரங்களை அரிந்து பதப்படுத்தும் பொறிக்கு வழங்குவதற்கு இது இட்டுச்செல்லும். ஆதலால், செயற்பாடுகளின் செயற்திறனின்மை மற்றும் பயனுறுதியின்மை பொருட்களின் கழிவுகளிற்கு வழிவகுக்கும்.

  தொழிற்சாலையானது வெட்டும் ஆலைக்கு மரத் தேவைப்பாட்டினை தெளிவாக தொடர்படுத்தியிருக்கவில்லை. இதன்விளைவாக தொழிற்சாலையின் தேவைப்பாட்டினை நிறைவு செய்யாத மரங்களை மரம் அரியும் ஆலை வழங்குகிறது. இறுதியாக அத்தகைய மரம் கழிவாக முடிவுறுகின்றது.

- உற்பத்தி இலக்குகளை அடைந்துகொள்ளும் வகையில் தொழிற்சாலையின் மாதிரிகளுக்கு வெட்டப்பட்டு அரிந்த மரங்களுக்கு மேலதிகமாக பதப்படுத்தும் பொறிக்கு மேலதிக மரங்களை மரம் அரியும் ஆலை வழங்குகிறது.

  பெரும்பாலும் அத்தகைய மிகை மரங்கள் உற்பத்தி செயன்முறையில் பயன்படுத்தப்படாது குறைந்த விலையில் ஏல விற்பனை மூலம் விற்கின்றது அல்லது கழிவாக முடிவுறுத்தப்படுகின்றது.

**வலியுறுத்திக் கூறல்**

பல்வேறு பிரிவுகளிற்கிடையில் ஒருங்கிணைப்பு மற்றும் தொடர்பாடல் இன்மை கேஎவ்எம்பி இன் செயற்பாட்டில் செயற்திறனின்மை மற்றும் பயனுறுதியின்மைக்கு வழங்குகிறது நட்டத்தை விளைவிக்கலாம்.

பிரபல்யமற்ற அளவின் கரணமாக அல்லது திறந்த நிலையில் வைக்கப்பட்டு வெளிக்காரணிகளால் பாதிப்படைந்துள்ளதனால் தளபாடங்களைத் தயாரிக்க முடியாது என்ற அடிப்படையில் 2007 இலிருந்து 2010 வரையான காலத்தின் போது அரிந்த மரங்களின் ஏல விற்பனையினை உதாரணமாகக் கூறலாம்.

இல.ரூபா 1,215,891 புத்தகப் பெறுமதியான 18 மரக் குற்றிகள் (தேக்கு, முதிரை, பலா, மாகோனி, கிரன்டிஸ், மைக்றோ, பைனாஸ் பொன்றன) 2007 ஆம் ஆண்டு முதல் 2010 செப்தெம்பர் 15 வரையான காலத்தின் போது ரூபா 193,900 ஆன தொகைக்கு ஏலத்திற்கு விற்பனை செய்யப்பட்டிருந்தது ஆகவே இல.ரூபா 1,021,991 ஆன நட்டமைந்தது.

**சிபார்சுகள்**

- முறையான உற்பத்தி திட்டமிடல் செயன்முறை அறிமுகப்படுத்த வேண்டியதுடன் பிரிவுகளிற்கு இடையில் தகவல் தொடர்பு மற்றும் ஒருங்கிணைப்பை வலுப்படுத்த வேண்டும்.
- பதப்படுத்தல் பொறிக்கு வழங்கப்படுவதற்கு வேண்டப்பட்ட அரிந்த மரங்களின் அளவு மற்றும் வகுதி தொடர்பான தெளிவான அறிவுறுத்தல்கள் மரம் அரியும் ஆலைக்கு வழங்கப்படுதல் வேண்டும்.
- மரம் அரியும் ஆலைக்கு கட்டளையிட முன்னர் தொழிற்சாலையானது பெற்றுக்கொள்ளக் கூடிய மரங்களை பதப்படுத்தும் பொறியுடன் பரீடசிக்க வேண்டும்.

**அரச மரக் கூட்டுத்தாபனத்தின் பதில்**

## 3.17. அரிவதற்கான மரக்குற்றிகளை இனங்காண்பதற்கு முறையான நடைமுறை இன்மை

**அவதானிப்புகள்**

மரம் அரிதல் செயன்முறையை திட்டமிடும் போது மரம் அரியும் ஊழியர்கள் பொருத்தமான மரக்குற்றிகளை இனங்காண்பதில்லை என் நாங்கள் அவதானித்தோம்.

சாதாரணமாக தொழிற்சாலைக்கு அதன் பயன்பாட்டிற்காக 3 அடி சுற்றளவுள்ள மரக்குற்றிகள் தேவைப்படுகின்றது. இருந்தபோதிலும், அதிக சுற்றளவுள்ள மரக்குற்றிகள் ஆலையில் அரியப்படுகின்ற சந்தர்ப்பங்களை நாங்கள் அவதானித்தோம், ஆதலால் தொழிற்சாலையின் பயன்பாட்டிற்காக பொருத்தமற்ற மர உற்பத்தியினை விளைவித்தது. அத்தகைய மரங்கள் பயன்படுத்தப்படாது களஞ்சியத்தில் காணப்பட்டன.

**வலியுறுத்திக் கூறல்**

3 அடிக்கு மேற்பட்ட சுற்றளவு கொண்ட மரக்குற்றிகள் உயர்ந்த விலையில் நிலையத்தில் விற்கமுடியும் மற்றும் தொழிற்சாலை நோக்கத்திற்காக அத்தகைய மரக் குற்றிகளை வழங்குதலானது கழிவு வளங்களை வீணாக்குவதாக கருதப்படுகின்றது.

**சிபார்சு**

கழிவை தவிர்ப்பதற்காக தொழிற்சாலையின் மர வேண்டுதலானது தொழிற்சாலையின் தேவைகளின்படி வெட்டுதல் மற்றும் அரிதல் முறைப்படி திட்டமிடப்பட வேண்டும்.

**அரச மரக் கூட்டுத்தாபனத்தின் பதில்**

## 3.18. அரச மரக் கூட்டுத்தாபனத்தால் திட்டமிடப்படாத நம்பகமற்ற உற்பத்தி இலக்குகள்

**அவதானிப்பு**

- அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் சந்தைப்படுத்தல் முகாமையாளர், உற்பத்தி முகாமையாளர் முகாமைத்துவ கணக்காளர் ஆகியோரை உள்ளடக்கும் விசேட குழுவொன்று மரம் அரியும் ஆலை மற்றும் தளபாட தொழிற்சாலைக்கான உற்பத்தி இலக்குகளை நிர்ணயிக்கின்றது.
  தளபாட தொழிற்சாலையிலிருந்து பிரபல்ய மற்றும் பிரபல்யமற்ற மரங்களிற்காக வேண்டுதல் இல்லாதிருந்தும் இலக்குகளை அடைந்து கொள்ளும் வகையில் பிரபல்யமான பிரபல்யமற்ற ஆகிய இரண்டு அளவுகளிலுமுள்ள மரங்களை மரம் அரியும் ஆலை அரிந்திருந்தமையை நாங்கள் அவதானித்தோம்.

  ஏற்கனவே அந்த பிரபல்யமற்ற அளவுகள் தொழிற்சாலையால் அரிதாகவே பயன்படுத்தப்படுவதுடன் பதப்படுத்தல் பொறியில் திரண்டிருந்தது. குறைந்த விலையில் ஏலத்தில் விற்கப்பட்டது. ஆதலால் கேஎவ்எம்பி இற்கு நட்டங்களை விளைவித்தது.

  2010 மே, யூன் மற்றும் செப்தெம்பர் மாதங்களில் ரூபா 145,800 தொகைக்காக ரூபா 1,241,396 கிரயமுடைய பல்வேறு வகையான மரங்களின் (தேக்கு, முதிரை, மாகோனி, மைக்றோ, பலா, கிரான்டிஸ், கும்பக், பைனஸ் போன்றன) 22 தொகுதிகளின் ஏலவிற்பனை ரூபா 1,095,596 நட்டமேற்படுத்தியமையினை இதற்கு உதாரணமாக குறிப்பிட முடியும்.

  ஏலவிற்பனையில் வழங்கப்பட்ட ரூபா 1,083,676 பெறுமதியுடைய நல்ல தரமுடைய மரங்களின் 17 மிகக் குறைந்த விலை மனுக்கள் பெற்றுக்கொள்ளப்பட்டதனால் விற்கப்பாது காணப்பட்டமையினையும் நாங்கள் அவதானித்தோம்.

- தொழிற்சாலை தளபாடங்களை கேள்விக்காக அல்லது கட்டளைகளை பூர்த்தி செய்வதற்காக உற்பத்தி செய்யவில்லை. ஆனால் இலக்குகளை அடைந்து கொள்வதற்காகவே உற்பத்தி செய்யப்படுகின்றது. அவ்வாறான முழுமையாக அல்லது அரைவாசி பொருத்தப்பட்ட பூர்த்தியடைந்த உற்பத்திப் பொருட்களின் அதிக எண்ணிக்கையானவை களஞ்சியத்தில் அலங்கோலமாக வைக்கப்படுகிறது. அவ்வாறான நடைமுறைச் சேதங்களையும் கழிவுகளையும் விளைவிக்கின்றது.





**வலியுறுத்திக் கூறல்**

மரம் வெட்டுதல் மற்றும் தளபாட உற்பத்தியின் திறனற்ற திட்டமிடலானது வளங்கள் வீணாவதற்கும் இறுதியாக கேளவ்ளம்பி இற்கு நிதி நட்டங்களிற்கும் வழிவகுக்கும்.

**சிபர்சுகள்**

முறையான உற்பத்தி திட்டமிடல் மற்றும் சந்தை கேள்விகளுடன் ஒத்திருக்கும் யதார்த்தமான இலக்குகளை மரம் அரியும் ஆலையும் தொழிற்சாலையும் அறிமுகப்படுத்த வேண்டும்.

**அரச மரக் கூட்டுத்தாபனத்தின் பதில்கள்**

## 3.19. பதப்படுத்தும் பொறியில் முறையான இருப்புப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

**அவதானிப்புக்கள்**

- மரம் பெறுதல் மற்றும் வழங்கலை ஒழுங்குபடுத்துவதற்கு பதப்படுத்தல் பொறியில் நாளதுவரையாக்கப்பட்ட/ முறையான இருப்புப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை என நாங்கள் அவதானித்தோம்.
- மேலும், களஞ்சியத்தல் முறையான அடுக்கி வைத்தல் முறைமை பேணப்பட்டிருக்காததுடன் பதப்படுத்திய மரங்களுக்காக முறையான களஞ்சிய வசதிகள் காணப்படவில்லை. இவை பதப்படுத்தும் பொறிக்கு வெளியில் திறந்த வெளியில் களஞ்சியப்படுத்துவதன் விளைவாக மரங்கள் பழுதடைந்திருந்தன.

**வலியுறுத்திக் கூறல்**

- பதப்படுத்தும் பொறியினால் பின்பற்றப்பட்ட நலிவான பதிவேடு பேணல் நடைமுறை காரணமாக மரம் பதப்படுத்தும் பொறி களஞ்சியத்தில் இருந்த மரத்தின் வகுதி மற்றும் அளவுகளை இனங்காண்பது கடினமாக உள்ளது.
- வெட்டிய மரத்தின் போதாக்குறைவான மற்றும் முறையற்ற களஞ்சியப்படுத்தல் மரத்தினை பாதிப்படைய செய்யும் அத்துடன் மேலதிக கிரயத்தில் மேலும் பதப்படுத்தல் செய்யவேண்டியேற்படும்.

**சிபார்சுகள்**

முகாமைத்துவமானது பதப்படுத்திய மரங்களை முறைப்படியாக களஞ்சியப்படுத்தவதற்கு புதிய களஞ்சியங்களை நிர்மாணிப்பதற்கான தேவையுள்ளதுடன் மரம் பதப்படுத்தும் பொறியில் பூரணமான மற்றும் நாளதுவரையாக்கப்பட்ட இருப்புப் பதிவேடு பேணுவதற்கு உரிய முறைமை அறிமுகப்படுத்த வேண்டிய தேவையுள்ளது.

**அரச மரக் கூட்டுத்தாபனத்தின் பதில்கள்**

## 3.20. 2009 திசெம்பர் 31 இல் மரம் பதப்படுத்தல் பொறியில் இருப்பு மெய்மையாய்வு நடாத்தல்.

**அவதானிப்பு**

2009 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மரம் பதப்படுத்தும் பொறியில் இருந்த இருப்புக்களை மெய்மையாய்வு செய்வதற்கு பௌதீக மெய்மையாய்வொன்று நடாத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. பதிலாக புத்தக மீதிகள் பௌதீக மீதிகளான கணக்கிடப்பட்டிருந்தது.

இச்சந்தர்ப்பங்களில், நாங்கள் 2010 ஆகஸ்ட் 12 முதல் 2010 ஒத்தோபர் 06 வரையான காலத்தின் போது அரச மரக் கூட்டுத்தாபனத்தின் உத்தியோகத்தர்களுடன் முழு இருப்புக்களின் பௌதீக மெய்மையாய்வை நடாத்துவதற்கு கேளவ்எம்பி முகாமைத்துவத்தை வேண்டியிருந்தோம். பௌதீக மெய்மையாய்வு பூர்தியான பின்னர் மரம் பதப்படுத்தும் பொறித்தொகுதியில் இருப்புக்களின் பெறுமதி இல.ரூபா 5,522,777 ஆக இருந்தது. ரூபா 6,851,477 தொகையான புத்தக மீதியுடன் ஒப்பிடும் போது அதன் மதிப்பீடு அத்திகதியில் உள்ளவாறான இருப்புக்களின் பெறுமதி ரூபா 1,328,700 ஆன தொகையால் புத்தக மீதியை விடக் குறைவாக இருந்தது என்பதனை வெளிப்படுத்தியது

**வலியுறுத்திக் கூறல்**

ஒழுங்கான இடைவெளியில் மற்றும் ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் பௌதீக மெய்மையாய்வு செய்வதற்கும் புத்தகங்ளை சீராக்குவதற்கும் முரண்பாடுகளை புலனாய்வு செய்வதற்கும் தவறியமை பின்வருவனவற்றினை விளைவிக்கலாம்.

அ) கண்டுபிடிக்காதும், வெளிப்படுத்ததும் முரண்பாடுகளை உறுதிப்படுத்தல், மற்றும்

ஆ) நிதிக் கூற்றுக்களில் இருப்புக்களின் பெறுமதியினையும் இலாபம்/ நட்டத்தினையும் குறைத்துக் கூறல்கள் / அதிகரித்துக் கூறல்கள்

**சிபார்சுகள்**

ஒவ்வொரு இடத்தினதும் இருப்புக்களின் பௌதீக மெய்மையாய்வு சாத்தியமான போது கணக்காய்வாளர்களின் முன்னிலையில் ஒழுங்கான இடைவெளியில் மற்றும் ஒவ்வொரு நிதியாண்டு இறுதியிலும் செயற்படுத்தப்பட வேண்டும். உடனடி நடவடிக்கை எடுக்கும் நோக்கத்துடன் ஏதாவது முரண்பாடுகளை புலனாய்வு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**அரச மரக் கூட்டுத்தாபனத்தின் பதில்கள்**

## 3.21. கொதிகலனிற்காக அரிந்த மரங்களின் புறவெட்டுக்களைப் பயன்படுத்தல்

### அவதானிப்பு

தளபாடத்தன் பல்வேறு பகுதிகளைத் தயாரிப்பதற்கம் பயன்படுத்தக்கூடிய அரிந்த மரங்களின் புறவெட்டுக்களானவை பதப்படுத்தும் பொறியில் நெருப்பூட்டும் விறகு கொதிகலனிற்காக விறகாக பயன்படுத்தபட்டிருந்தது என நாங்கள் அவதானித்தோம்.

கொதிகலனிற்கு அருகில் குவியலாக இருக்கின்ற அத்தகைய புறவெட்டுக்களை கீழேயுள்ள புகைப்படம் எடுத்துக்காட்டுகிறது.



### வலியுறுத்திக் கூறல்

தளபாடங்களை உற்பத்தி செய்வதற்கு பயன்படுத்தக் கூடிய தரமான புறவெட்டுக்களை விறகாகப் பயன்படுத்தலானது வளங்களின் சிக்கனமற்ற பயன்பாட்டிற்கும் இறுதியாக கேஎவ்எம்பி ஆல் ஏற்பட்டுள்ள நட்டத்தை மேலும் அதிகரிக்கவும் வழிவகுக்கும்.

### சிபார்சுகள்

புறவெட்டுக்களை கொதிகலனிற்கு விறகாக பயன்படுத்த முன்னர் அவற்றினை தெரிந்தெடுப்பதற்கு உரிய முறைமை அறிமுகப்படுத்த வேண்டும்.

### அரச மரக் கூட்டுத்தாபனத்தின் பதில்கள்

## 3.22. கேஎவ்எம்பி இல் பயன்படுத்தப்படாத மரக்குற்றிகள்

**அவதானிப்பு**

குறித்த சில சந்தர்ப்பங்களில், கேஎவ்எம்பி இன் முகாமைத்துவம் டிப்போக்களுக்கு சமூகமளித்து கேஎவ்எம்பி இற்கு மரக்குற்றிகள் / அரிந்த மரங்களை அனுப்புவதற்கு நிலைய அலுவலகங்கள் முகாமைத்துவம் வேண்டியுள்ளதை நாங்கள் அவதானித்தோம். அந்த மரக் குற்றிகளை கட்டளையிடப்பட்டவாறு பயன்படுத்தாமல் கேஎவ்எம்பி இல் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது.

**வலியுறுத்திக் கூறல்**

தளபாட உற்பத்திக்கு பயன்படுத்தப்படாது மற்றும் விற்பனை நிலையங்களிற்கு மாற்றப்படாது மரக் குற்றிகள் மற்றும் அரிந்த மரங்களை விடுதல் அவை அழிவடைவதற்கு அல்லது பாதிப்படைவதற்கு வழிவகுக்கும்.

**சிபர்சுகள்**

மரத்தை குறித்த திட்டத்தின் படி கட்டளையிடப்பட வெண்டியிருந்ததுடன் அவற்றினை பயன்படுத்தாமல் வைத்திருப்பதை விட தளபாட உற்பத்தியில் பயன்படுத்தப்பட வேண்டும். தொழிற்சாலையின் உற்பத்தி செயன்முறைக்காகத் தேவைப்பட்ட மர வகுதிகளுக்கு மாத்திரம் மரத்திற்கான கட்டளைகள் வரையறுக்கப்பட வேண்டும்.

**அரச மரக் கூட்டுத்தாபனத்தின் பதில்கள்**

# பகுதி -VI

## 3.23. காட்சியறையிலிருந்து கட்டளையிடப்படாத போதும் தளபாட தொழிற்சாலைகளிலிருந்து பூர்த்தியான பொருட்களை மாற்றம் செய்தல்

**அவதானிப்பு**

- முறையான விற்பனைத் திட்டமில்லாமல் பல்வேறு இடங்களில் தளபாட தொழிற்சாலைகள் தளபாடம் உற்பத்தி செய்கின்றன. இதன்விளைவாக, அத்தகைய தளபாடங்களுக்குத் தேவையின்மை இருப்பினும் காட்சியறைகள் தொழிற்சாலைகளிலிருந்து தளபாடங்களை பெறுகின்றன.
- 2010 யூலை 31 இல் உள்ளவாறு இரத்மலானை காட்சியறையில் இருப்புப் பட்டியலை மீளாய்வு செய்கையில் பின்வருவன வெளிப்பட்டது.
    - 2010 யூலை 31 இல் உள்ளவாறான இருப்பு பெறுமதிகளின் 20 சதவீதத்தினை அம்பாறையிலிருந்து பெறப்பட்ட பொருட்கள் உள்ளடக்கியிருந்தன. அப்பொருட்களில் சில நீண்ட காலமாக நகராது இருந்தன.
    - 2000 ஆம் ஆண்டிற்கு முன்னர் பெறப்பட்ட எழுபத்தியேழு தளபாட விடயங்கள் காட்சியறையில் இன்னமும் இருக்கின்றன.

**வலியுறுத்திக் கூறல்**

முறையான விற்பனை திட்டம் இல்லாமல் உற்பத்தி செய்தல் மற்றும் இறுதியில் காட்சியறையில் பூர்த்தியான உற்பத்திப் பொருட்கள் வைத்திருக்கின்றமை பொருளாதார வளங்களை தேவையற்றவகையில் வைத்திருப்பதற்கு வழிவகுப்பதுடன் விற்பனை மேம்பாட்டின் செயற்திறனின்மையையும் சுட்டிக்காட்டுகின்றது.

காட்சியறையில் களஞ்சியப்படுத்தியிருக்கின்ற இறுதியாக்கப்பட்ட பொருட்களின் அதிகூடிய மிகை இருப்புச் சந்தர்ப்பங்களை கீழேயுள்ள புகைப்படம் விளக்குகிறது.



**சிபர்சுகள்**

காட்சியறையானது முடிவுப்பொருட்களால் நிரம்பி வழிவது பகுத்தறிவுள்ள வாடிக்கையாளர்களிற்கு சந்தோசமான சூழல் அமையாததால் அவ்வாறு செய்திருத்தல் வேண்டும். கண்கவர்ச்சிக்கு தேவைப்பட்ட பூர்த்திசெய்யப்பட்ட பொருட்கள் மாத்திரம் காட்சியறையில் காட்சிப்படுத்தப்பட வேண்டும் என்பதனை முகாமைத்துவம் உறுதிப்படுத்த வேண்டும். பூர்த்தியாக்கிய பொருட்களை களஞ்சியப்படுத்துவதற்கு போதிய களஞ்சிய

இடவசதி கிடைக்கக் கூடியதாக இருந்ததுடன் சந்தைப்படுத்தல் தந்திரோபாய வாடிக்கையாளர்கள அவர்களுடைய பொருட்களைத் தெரிவு செய்வதற்கு அத்தகைய களஞ்சியங்களிற்கு அமைக்கலாம்.

**அரச மரக் கூட்டுத்தாபனத்தின் பதில்கள்**

## 3.24. காட்சியறையால் பெறப்பட்ட தளபாட இருப்புக்களைப் பரிசோதித்தல்.

**அவதானிப்பு**

காட்சியறை உத்தியோகத்தர்கள் தொழிற்சாலைகளிலிருந்து பெறப்பட்ட பொருட்களை ஏற்றுக்கொள்வதில் அவர்களுடைய தற்றுணிபைப் பயன்படுத்துவதில்லை. களஞ்சியங்களில் பகுதியளவில் பொருத்தப்பட்ட மற்றும் பூர்த்திசெய்யப்படாத பல பொருட்களை நாங்கள் அவதானித்தோம். வழமையாக அத்தகைய பொருட்கள் சம்பந்தப்பட்ட தொழிற்சாலைக்கு திருப்பி அனுப்பப்பட்டிருந்தன.

**வலியுறுத்திக் கூறல்**

காட்சியறை உத்தியோகத்தர்களால் பகுதியளவில் பொருத்தப்பட்ட மற்றும் பூர்த்தி செய்யப்படாத பொருட்களை ஏற்றுக்கொள்ளலானது நலிவான விற்பனை ஊக்குவிப்புக்கள் மற்றும் சந்தைப்படுத்தல் தந்திரோபாயங்களை வெளிப்படுத்துகிறது.

**சிபர்சுகள்**

காட்சியறை உத்தியோகத்தர்களிற்கு விற்பனைகள், சந்தைப்படுத்தல் தந்திரோபாயங்கள் மற்றும் காட்சியறை முகாமைத்துவம் என்பனவற்றில் பூரண பயிறிசியளித்தல் வழங்கப்பட வேண்டும்.

**அரச மரக் கூட்டுத்தாபனத்தின் பதில்கள்**

## 3.25. நடைமுறை வேலை பொருளிருப்பு பதிவேட்டினை ஏற்றுக்கொள்ளல்.

**அவதானிப்புகள்**

நடைபெறும் வேலை பொருளிருப்பு பதிவேடானது கூறுகள் மற்றும் பகுதியளவில் பூர்த்தி செய்த பொருட்களைக் கொண்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும் கேஎவ்எம்பி ஆனது தொழிற்சாலைகளில் முறையான பதிவேடுகள் பேணப்பட்டிருக்காமை காரணமாக பகுதியளவில் பூர்த்திசெய்யப்பட்ட பொருட்கள் நடைபெறும் வேலை இருப்புக்களின் ஒரு பகுதியாக பெறுமதியிடப்படுவதில்லை என்பதனை அவதானித்தோம்.

**வலியுறுத்திக் கூறல்**

நடைபெறும் வேலையின் ஒரு பகுதியாக பகுதியளவு பூர்த்தி செய்யப்பட்ட அலகுகளை கருத்திற்கொண்டதன் விளைவால் பொருளிருப்பு பதிவேட்டு மீதி குறைத்துக் காட்டப்பட்டிருந்ததுடன் ஆண்டிற்கான நட்டங்கள் அதிகரித்துக்காட்டப்பட்டிருந்தது.

**சிபர்சுகள்**

- பொருள் இருப்பைப் பெறுவதற்கு முறையான பதிவேடு பேணப்பட வேண்டும்.
- பகுதியளவில் பூர்த்தி செய்யப்பட்ட பொருட்கள் நடைபெறும் வேலையின் ஒரு பகுதியாக பெறுமதியிட்ப்பட வேண்டும்.

**அரச மரக் கூட்டுத்தாபனத்தின் பதில்கள்**

## 3.26. கேள்வி இல்லாத தளபாடங்களிற்காக வெளித்தரப்பு ஒப்பந்தகாரர்களிடம் கட்டளையிடல்

**அவதானிப்பு**

கேஎவ்எம்பி ஆனது கேள்வி இல்லாத தளபாடங்களிற்காக வெளித்தரப்பு ஒப்பந்தகாரர்களிற்கு கட்டளையிடுவதை நாங்கள் அவதானித்தோம். கேள்வியில்லாது தளபாடங்களிற்காக பொருத்துதல் மற்றும் மெருகூட்டலிற்காக 2009 சனவரி முதல் 2010 யூலை 31 வரையான காலத்தின் போது மூன்று ஒப்பந்தகாரர்களிற்கு ரூபா 1,487,173 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இது களஞ்சியங்களில் பூர்த்திசெய்யப்பட்ட உற்பத்திப் பொருட்கள் குவிக்கப்படுவதை விளைவித்திருந்தது.

தனியார் ஒப்பந்தகாரர்களால் உற்பத்தி செய்யப்பட்ட தளபாடம் குறைந்த தரத்தில் உள்ளதெனவும் அவதானிக்கப்பட்டது. பொலீஸ் திணைக்களத்திற்கு விற்கப்பட்ட 500 விரிவுரை மண்டப கதிரைகளில் 50 கதிரைகள் திருப்பி அனுப்பப்பட்டதை உதாரணமாக குறிப்பிடலாம்.

**வலியுறுத்திக் கூறல்**

- தொழிற்சாலை மற்றும் காட்சியறைகளில் இருக்கின்ற பெருமளவான பூர்த்தியாக்கப்பட்ட இருப்புக்களால் தொழிற்படு மூலதன பற்றாக்குறையை ஏற்படுத்தியுள்ளது.
- ஒப்பந்தகாரர்களால் நிறைவேற்றப்பட்ட வேலைகள் தொடர்பாக முறையான தரக்கட்டுப்பாடு பிரயோகிக்கப்படாமையால் விற்பனைத் திருப்பங்களை விளைவித்திருந்தது.
- போதிய களஞ்சிப்படுத்தல் வசதியின்மை காரணமாக பூர்த்தியாக்கிய உற்பத்திப் பொருட்கள் திறந்த வெளியில் இயற்கை அழிவுக்கு உட்பட்டிருந்ததால் தர வீழ்ச்சியினை விளைவித்திருந்தது.
- நற்பெயரை இழந்தது.

**சிபார்சுகள்**

- கேஎவ்எம்பி ஆனது தவிர்க்க முடியாத கரணங்களால் தொழிற்சாலையில் கட்டளைகளை நிறைவேற்ற முடியாததிருந்தால் மாத்திரம் வெளித்தரப்பு ஒப்பந்தகாரர்களுக்கு கட்டளைகளை முன்வைக்க வேண்டும்.
- வெளித்தரப்பு ஒப்பந்தகரர்களால் விநியோகிக்கப்பட்ட தளபாடங்கள் நியம தர பரிசோதனைகளிற்கு உட்படுத்தப்பட வேண்டும்.

**அரச மரக் கூட்டுத்தாபனத்தின் பதில்கள்**

# பகுதி - VII

## 04. கணக்காய்வுத் தீர்வுகள்

கேஎவ்எம்பி இன் செயற்பாடுகள் வினைத்திறன், ஆக்கபூர்வமாக மற்றும் சிக்கனமாக மற்றும் சுற்றாடலுக்கு சிநேகபூர்வமான வழிகளில் நடாத்தப்பட்டிருக்கவில்லை. கீழே பொழிப்பாக்கப்பட்டவாறு முக்கிய செயற்திறனின்மை மற்றும் சிக்கனமற்ற செயற்பாடுகள் பல ஆண்டுகளாக வர்த்தக ரீதியாக நிதி ரீதியாக சிறப்பற்ற வழிகளில் கேஎவ்எம்பி இன் செயற்பாடுகளிற்கு வழிவகுத்திருந்தது.

- தற்போதைய சந்தை விலைக்கு கீழே குறிப்பிட்டு தளபாடங்கள் விற்பனை விலையினை நிர்ணயித்தல்.
- தளபாடங்களின் நியம கிரயம் யதார்த்தமற்றதுடன் நீண்டகாலமாக திருத்தப்பட்டிருக்கவில்லை.
- பொறியானது உச்சளவு விற்பனை கலவைகளில் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. (வெட்டுப்புள்ளி விற்பனை மட்டத்திற்கு அப்பால்)
- வாடிக்கையாளர்களிற்கு கவரும் நிலையமாக காட்சியறைகளை பேணாமை.
- சந்தைப்படுத்தல் தந்திரோபாயங்கள், செயற்பாட்டுத் திட்டம் மற்றும் பயிற்றப்பட்ட உத்தியோகத்தர்கள் இன்மை
- பொருள் விரயம், பயன்படுத்தப்படாத ஊழியம் மற்றும் இயந்திர மணித்தியாலங்கள் போன்றவாறான அத்தகைய செயற்திறனின்மைகள்
- மூலப் பொருட்களின் சிக்கனமற்ற கொள்வனவு மற்றும் கொள்வனவு வழிகாட்டல்களை பின்பற்றத் தவறியமை.
- காணி மற்றும் கட்டிடங்களின் செயற்திறனற்ற பயன்பாடு, குறிப்பாக பயன்படுத்தப்படாத காணிகள் தேவைப்படுகின்ற பாதுகாப்பான களஞ்சியப்படுத்தல் களஞ்சிய வசதிகளை வழங்குவதற்கு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. இது ஒரு முக்கியமான தேவைப்படாகும்.
- சுற்றாடலிற்குப் பாதகமான உற்பத்தி செயன்முறைகளை நடாத்தல்.

**பரிகார நடவடிக்கைகளுக்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினுடைய சிபார்சுகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.**

- மனிதவலு மற்றும் இயந்திரத்தினை உச்சளவு மட்டத்திலும் செயற்திறனாகவும் பயனுறுதியாகவும் பயன்படுத்துவதற்கு பதவியணியினை நிர்ணயித்தல், ஆட்சேர்ப்புத் திட்டத்தினை உருவாக்குதல், நுட்பமுள்ள மற்றும் அனுபவமிக்க தொழிலாளர்களைச் சேர்த்துக் கொள்ளல், அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளல் என்பன.
- நியம கிரயமிடல் கட்டமைப்பு தற்போதைய சந்தை விலைக்கு ஒத்திருக்கும் வகையில் செய்ய வேண்டியதுடன் தற்போதைய கிரய கட்டமைப்பு மற்றும் போட்டிச் சந்தை விலைகளைக் கருத்திற்கொள்வதன் மூலம் தளபாட விற்பனை விலைகளை நிர்ணயித்தல்.
- கேஎவ்எம்பி ஆனது தற்போது பின்பற்றுகின்ற கையால் விலையிடல் நடைமுறைகளுக்குப் பதிலாக தானியங்கி விலையிடல் மற்றும் பட்டியலிடல் நடைமுறைகளினூடாக விற்பனை முறைமையை அறிமுகப்படுத்தலை கருத்திற்கொள்ள வேண்டும்.
- கேஎவ்எம்பி ஆனது சந்தை தேவையுடன் அதிகூடிய இலாபத்தன்மையுடைய உற்பத்திக் கலவையை இனங்காண வேண்டும். இது கிடைக்கக் கூடிய வரையறுத்த வளங்களிற்குள் வியாபாரத்திற்கு சாதகமாக வழங்கும்.
- அலுவலக நேரங்களிற்குப் பின்னரும் வார இறுதி நாட்களிலும் பொருட்களை வாங்க விரும்பும் வாடிக்கையாளர்களை கவரும் வகையில் காட்சியறைகளை நவீனமயப்படுத்தல் மற்றும் காட்சியறையின் செயற்பாட்டு நேரத்தினை நீடித்தல்.
- கேஎவ்எம்பி மற்றும் அரச மரக் கூட்டுத்தாபனத்தின் சந்தைப்படுத்தல் பிரிவு என்பன விரிவான மற்றும் பொருத்தமான சந்தைப்படுத்தல் திட்டமொன்றை விருத்தி செய்ய வேண்டியதுடன் விருத்தி செய்யப்பட்ட திட்டத்திற்கமைய அதன் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளை நடாத்த வேண்டும்.
- திட்டமிடப்பட்ட விற்னைகளை கவனத்திற்கொண்டு விளம்பர செலவுகளை சிக்கனமாக்கல் மற்றும் விற்பனைப்பொதிகளை வாடிக்கையாளர்களிற்கு வழங்கும் போது அவற்றின் சேர்மானம் தொடர்பில் முகாமைத்துவத் தீர்மானங்களின் மீறல்களைத் தவிர்த்தல்.
- தொழிற்சாலைகள் மற்றும் காட்சியறையில் ஈடுபட்டிருந்த சகல உத்தியோகத்தர்களிற்கும் முறைசார்ந்த பயிற்சி வழங்க வேண்டும். தேவைப்பட்ட பயிற்சி ஒழுங்கான அடிப்படையில் மதிப்பிடப்பட வேண்டியதுடன் சகல தொழிலாளிற்கும் அவசியமாயின் வேலை மற்றும் காட்சியறை பயிற்சி வழங்க வேண்டும்.

- தொழிலாளரின் செயலாற்றல் மாதாந்தம் கண்காணிக்கப்பட வேண்டியதுடன் உடனடி பின்னூட்டல் வழங்கப்பட வேண்டியதுடன் நியமத்திற்கமைய செயற்படாத உத்தியோகத்தர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும். தொழிலாளர்களின் செயலாற்றலின் அடிப்படையில் மிகையூதியம்/ ஊக்குவிப்பு திட்டம் அறிமுகப்படுத்த வேண்டும்.
- முகாமைத்துவ தகவல் முறைமை (எம்ஐஎஸ்) கேஎஸ்எம்பி இன் செயலற்றல் தொடர்பில் கண்காணிப்பு மற்றும் சந்தைப்படுத்தல் தீர்மானங்களிற்காக உண்மையான மற்றும் உரிய வேளைக்குரிய தகவல்கள் உற்பத்திகளிற்கு அறிமுகப்படுத்த வேண்டும்.
- காட்சியறையானது அதனது தேவைகளை முன்னதாகவே மதிப்பிவதற்கும் அத்தகைய கேள்விகளின் அடிப்படையில் தொழிற்சாலைகளுக்கு வேண்டுதல்கள் மேற்கொள்ள வெண்டும்.
- வேலை அட்டைகளை உள்ளடக்கும் முறையான உற்பத்தி திட்டத்தை தொழிற்சாலை வைத்திருக்க வேண்டும். இதில் பிரதான முகாமையாளர்கள் (காட்சியறை தலைவர், மரம் அரியும் ஆலை தலைவர், மரம் பதப்படுத்தும் பொறியின் தலைவர், மற்றும் தொழிற்சாலை தலைவர்) திட்டமிடல் செயன்முறைகள் ஈடுபட வேண்டும். மரம் அரியும் ஆலை மற்றும் தொழிற்சாலைக்கு முறையான உற்பத்தி திட்டமிடல் மற்றும் யதார்த்தமான இலக்குகள் அறிமுகப்படுத்த வேண்டும்.
- தொழிற்சாலையின் மரத்தேவைகள் இருப்புக்களை குவித்து வைப்பதை தவர்ப்பதற்காக உற்பத்திச் செயன்முறையினை செயற்திறனுடனும் பயனுறுதிமிக்கதாகவும் திட்டமிட்டபடி மரத்தினை முறையாக அரியவும் வெட்டவும் திட்டமிடவேண்டும். மேலும் புறவெட்டுக்களை கொதிகலனிற்கு விறகாக பயன்படுத்த முன்னர் அவற்றினை தெரிந்தெடுப்பதற்கு உரிய முறைமை அறிமுகப்படுத்த வேண்டும்.
- மரம் அரியும் ஆலை கட்டளையிட முன்னர், மரம் பதப்படுத்தும் பொறியில் பெற்றுக்கொள்ளக்கூடிய மரங்களை தொழிற்சாலை பரிசோதிக்க வேண்டும்.
- மரங்களை அதன்அளவுகள் மற்றும் வகுதிகளின்படி ஒழுங்குபடுத்திய பின்னர் மரம் பதப்படுத்தும் பொறிக்கு அனுப்புவதற்கு மரம் அரியும் ஆலை திட்டமொன்று வழங்க வேண்டும்.
- கேஎஸ்எம்பி ஆனது ஊழியம் மற்றும் இயந்திர மணித்தியாலங்களின் பற்றாக்குறை காரணமாக தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்ய முடியாதிருந்த மிகைக் கட்டளைகள் காணப்படுவதாக இருத்தல் மாத்திரம் வெளிதரப்பு ஒப்பந்தகாரர்களிற்கு கட்டளைகளை வழங்க வேண்டும்.
- முகாமையானது குறிப்பிடப்பட்ட கொள்வனவு வழிகாட்டல்களுடன் கண்டிப்பாக இணங்கி நடப்பதற்கான தேவையிருந்தது.

- தரக்கட்டுப்பாட்டுச் செயற்பாடுதிட்டத்தின்படி உற்பத்தி செய்யப்படுகின்ற தளபாடங்கள் மற்றும் வெளித்தரப்பு ஒப்பந்தகாரர்களால் மேற்கொள்ளப்பட்ட வேலைகள் தொடர்பில் தரக்கட்டுப்பாட்டில் அனுபவமுள்ள தரக்கட்டுபாட்டு உத்தியோகத்தர் ஒருவரை வேலைக்கமர்த்துவதன் மூலம் உருவாக்க வேண்டியிருந்தது.
- நிலத்தின் மேற்பரப்பு அல்லது நிலத்தடி நீர் மாசடைவதனை தவரிர்க்கும் வகையில் மரப் பதப்படுத்தல் பகுதியின் தளங்கள் மற்றும் வெட்டிய மரத்தை களஞ்சியப்படுத்தும் பகுதி ஏதாவது ஒழுக்குகள் அல்லது எதிர்பாராத நிகழ்வுகளை சேகரிப்பதற்காக ஏற்பாட்டுடன் நன்றாக சீமெந்திடவேண்டும்.
- பிரமாணங்களின்படி கழிவுப் பொருட்களை அகற்றுவதற்கு அவசியமான நடவடிக்கைகள் எடுத்தல்.
- தொழிற்சாலைக்குள் போதிய காற்றோட்டம் மற்றும் வெளிச்சம் வழங்குவதற்கும் தொழிலாளருக்கு பாதுகாப்பான அணிகலன்கள் வழங்குவதற்கும் ஒழுங்கு செய்தல்.
- பயன்படுத்தமுடியாத இயந்திரங்கள், பகுதிகள், மற்றும் பகுதியளவில் பொருத்திப்பட்ட வழக்கொழிந்த தளபாடங்களை தொழிற்சாலை வளவிலிருந்து அகற்ற வேண்டியதுடன் 5 எஸ் கொள்கையை அறிமுகப்படுத்த வெண்டும்.
- முகாமைத்துவமானது பதப்படுத்திய மரங்களை முறைப்படியாக களஞ்சியப்படுத்தவதற்கு புதிய களஞ்சியங்களை நிர்மாணிப்பதற்கான தேவையுள்ளதுடன் மரம் பதப்படுத்தும் பொறியில் பூரணமான மற்றும் நாளதுவரையாக்கப்பட்ட இருப்புப் பதிவேடு பேணுவதற்கு உரிய முறைமை அறிமுகப்படுத்த வேண்டும்.
- பொருளிருப்பை பெற்றுக்கொள்வதற்காக முறையான பதிவேடுகள் பேணப்பட்டிருக்க வேண்டும். ஒவ்வொரு அமைவிடத்திலும் பொருளிருப்புக்களின் பௌதீக மெய்மையாய்வு குறிப்பாக அவதானிப்பாளர்களாக கணக்காய்வாளர்களுடன் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் ஒவ்வொரு செயல்நடவடிக்கை கால இறுதியிலும் இருப்புப் பதிவேடுகள் பௌதீக இருப்பு மீதிகளை வெளிப்படுத்தும் வகையில் சீராக்கப்பட வேண்டும்.
- பகுதியளவு பூர்த்தியாக்கப்பட்ட பொருட்கள் நடைபெறும் வேலையின் ஒரு பகுதியாக பெறுமதியிடப்பட வேண்டும்.
- காணி மற்றும் கட்டிடங்களை ஆய்வு செய்து மீள்பெறுமதியிடுவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் தற்போதைய சந்தைப் பெறுமதியை வெளிப்படுத்துவதற்கு கணக்குப் புத்தகத்தை சீராக்க வெண்டும்.

**அரச மரக் கூட்டுத்தாபனத்தின் பதில்கள்**

இந்த அறிக்கையில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் உத்தேசிக்கப்பட்ட பரிகார நடவடிக்கைக்கான சிபார்சுகளை நாங்கள் கவனத்திற்கு எடுத்தோம். மற்றும் பிரயோகிக்கக்கூடிய உரிய சிபார்சுகளை அமுல்படுத்துவதற்கு நாங்கள் ஏற்கனவே நடவடிக்கை எடுத்துள்ளோம் என்பதனை உங்களுக்கு தெரிவிக்க விரும்புகிறோம்.

கல்டிமுல்லவிலுள்ள தளபாடம் உற்பத்தி செய்யும் பொறியின் நிலைப்பாடு தொடர்பாக நடாத்தப்பட்ட இந்த செயலாற்றல் கணக்காய்விற்காகவும் கல்டிமுல்லவிலுள்ள தளபாடம் உற்பத்தி செய்கின்ற கட்டிடத்தொகுதியின் செயற்திறன் மற்றும் சிறக்குமியல்பினை அதிகரிப்பதற்கு உங்களுடைய பெறுமதிமிக்க சிபார்சுகளிற்காகவும் நாங்கள் மீண்டும் ஒரு தடவை எங்களின் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.